குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதினத் திங்கள் வெளியீடு

மலர் 48 | சுக்கில ஆண்டு சித்திரைத்திங்கள் 10, [illegible] 89 | இதழ் 6

தருமை ஆதீனம் ஆதிபரமாசாரிய[illegible]



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

-: குருபூஜை விழா :-

தருமையாதீனம் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஆநந்த மின்றி
  யரன்சமதை முத்தியெனில்
தானந்த வேதா
  கமஞ்சாற்ரு — ஊனம்
படுமே தசகா
  ரியத்திற் பலவுங்
கெடுமேயொன் ருமெனலுங்கேள்.

— முத்திநிச்சயம் 20

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | 10-5-89 | இதழ் 6

உட்பொருள்

எண்		பக்கம்
1	திருத்தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ்	(1-16)
2	"குருவருள் போற்றிக் குணம்பல பெறுவோம்!" ...	281
3	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	286
4	பித்தா...! ...	292
5	ஸ்ரீ சந்திரசேகரமூர்த்தி	296
6	கர்நாடக இசையில் கமகம் ...	297
7	சைவசித்தாந்த வரலாறு ...	301
8	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ...	306
9	'தேவர்' சொற்பொருள் விளக்கம் ...	309
10	போதமும் சித்தியும் ...	311
11	கூற்றுவ நாயனுர் ...	314
12	செய்திகள் ...	319
13	கடிதங்கள்	313, 318, 324
14	எதிர்காலம் ...	325
15	இதழ்வழிச் சைவசமயக்	

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்

பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையில்லாப் பெருங்கருணையினாலே காணாத அருவினுக்கும், உருவினுக்கும், காரணமாய்நிகழ்குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள், இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப் பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இங்கு ஸ்ரீ அபயாம்பிகை உடனாகிய ஸ்ரீ தருமபுரேசுவரசுவாமி திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அன்பர்கட்கு அருள்வழங்கிவருகின்றார். இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் குருவருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தம் குருமூர்த்திகளது அருளாணையின் படி, சைவபரிபாலனம் என்றும் நிகழ்ந்து வருவதற்குரிய ஞானபீடத்தை நிறுவி வீற்றிருந்து, ஜீவசமாதி கூடிய திருக்கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன் கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு, சுக்கில ஆண்டு வைகாசித் திங்கள் 4 ஆம் நாள் (17—5—1989) புதன்கிழமை தொடங்கிப் பெருவிழா நடைபெறும். இந்நாட்களில் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு தருமை ஆதீனம் நான்காவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றுக் காசியில் கங்கைக் கரையில் ஸ்ரீ குமாரசுவாமி மடம் அமைத்து, சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கச் செய்த இவ்வாதீன அடியவர் ஸ்ரீ குமர குருபரசுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு விழா நினைவாக நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமை ஆதீனம்

தருமை ஆதீனம் மடாலயம்
சுக்கில – வைகாசி
1989

கார்பார்சொக்கநாதத்தம்பிரான்

திருநாள் விபரம்

சுக்கில ஆண்டு வைகாசித் திங்கள்

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	திரு நாள்	விபரம்
3	16....5....89	செவ்வாய்		காலை 9-00 மணிக்குமேல் கணபதி ஹோமம். நவக்கிரகஹோமம்.
				அஸ்த நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் இரவு 8-30 மணிக்குமேல் 9-30 மணிக்குள் தனுர் லக்னத்தில் யஜமான அனுக்ஞை. சுவாமி அனுக்ஞை. விக்னேஸ்வர பூஜை. வாஸ்து சாந்தி. மிருத்ஸங்க்ரஹணம், அங்குரார்ப் பணம், ரக்ஷாபந்தனம்.
4	17....5....89	புதன்	1	அஸ்தநட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை மணி 9-00க்குமேல் 10-30க்குள் மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகத்துவஜாரோஹணம்.
5	18....5....89	வியாழன்	2	கற்பகவிருக்ஷக் காட்சி.
6	19....5....89	வெள்ளி	3	பூதம், பூதகி, இடும்பவாகனக் காட்சி.
7	20....5....89	சனி	4	நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி.
8	21....5....89	ஞாயிறு	5	சகோபுர ரிஷபவாகனக் காட்சி.

சுக்கில ஆண்டு வைகாசித் திங்கள்

9	22....5....89	திங்கள்	6	யானை, அன்னம், ஆட்டுக்கடாவாகனக் காட்சி.
10	23....5....89	செவ்வாய்	7	இரவு மணி 8-30க்குமேல் 9-30க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம், புஷ்ப விமான வெள்ளிரதக் காட்சி.
11	24....5....89	புதன்	8	குதிரை, கிளி, யானைவாகனக் காட்சி.
12	25 ...5....89	வியாழன்	9	காலை மணி 6க்குள் மேஷ லக்னத்தில் பஞ்ச மூர்த்திகளும் தேருக்கு எழுந்தருளல், காலை மணி 9-35க்குமேல் கடக லக்னத்தில் திருத் தேர் வடம்பிடித்தல்.
13	26....5....89	வெள்ளி	10	காலை ஸ்ரீசபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாருடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத் தருளல். இரவு துவஜாவரோஹணம்.
14	27....5....89	சனி		மௌன உற்சவம்.
15	28....5....89	ஞாயிறு		ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம்.
16	29....5....89	திங்கள்		காலை உத்ஸவப் பிராயச்சித்தாபிஷேகம், இரவு 8மணிக்குமேல் 9மணிக்குள் தனுர்லக்னத்தில் பஞ்சமூர்த்திகள் யதாஸ்தானம்.

தருமபுரம், அனைத்துலக சைவசித்தாந்த

தோத்திர சாத்திர

17. 18, 19 .... 5 89

நாள்	முற்பகல் 10·00 மணி முதல் — 1·00 மணி வரை
17—5—89 புதன்	வரவேற்புரை : திரு. தி. ந. இராமச்சந்திரன், பி. காம்., பி. எல்., ஆசியருளல் : தருமை ஆதீனப் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் முதன்மையுரை : டாக்டர் திரு. என். ஆர். பட்
18—5—89 வியாழன்	இரண்டாம் அமர்வு : ஆய்வுப்பொருள் : " சமய நோக்கில் தத்துவக் கோட்பாடுகள் " இணைப்பாளர் : மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் — சாங்கிய, யோக, தர்க்க, மீமாஞ்சை மதங்கள் கட்டுரையாளர்கள் : திரு. வீ. நாகராசன் — உலகாயத, சமண பௌத்த மதங்கள் திரு. டி. என். இராமச்சந்திரன் — வைணவ, ஏகான்மவாதமதங்கள்
19—5—89 வெள்ளி	நான்காம் அமர்வு : ஆய்வுப்பொருள் : " முத்திநிலையில் முப்பொருள் நிலை " இணைப்பாளர் : டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி கட்டுரையாளர்கள் : திரு. சி. சு. மணி — இறை திரு. ச. இரத்தினவேலன் — உயிர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் — தளை

ஆராய்ச்சி நிறுவனம் நடத்தும்

நுண்ணாய்வுக் கருத்தரங்கு

மூன்று நாட்கள்

பிற்பகல்

2-30 மணி முதல் — 5-00 மணி வரை

முதல் அமர்வு :

ஆய்வுப்பொருள் : "சமய நோக்கில் உலகத் தோற்றம்"

இணைப்பாளர் : டாக்டர் திரு. என். ஆர். பட்

கட்டுரையாளர்கள் :

டாக்டர் திரு. எஸ். என். கந்தசாமி — சமண, பௌத்தநோக்கில்

டாக்டர் திரு. ஆர். சுப்பிரமணியன் — ஏகான்ம, வைணவநோக்கி

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி — சித்தாந்த சைவநோக்கில்

மூன்றாம் அமர்வு : கலந்துரையாடல்

ஆய்வுப்பொருள் :

1. "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்" எனும் திருப்பாடல்
2. "திருமூலரின் காலம்"
3. "திருமுறைகள் வகுத்த அமைப்பு முறை"

இணைப்பாளர் :

மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

பங்கேற்போர் :

திரு. தி. வ. சாந்திமதிநாதன், டாக்டர் திரு. அ. கலியபெருமா

திரு. வி. சா. குருசாமிதேசிகர், திரு. தி. வே. கோபாலஐயர்.

ஐந்தாம் அமர்வு : கலந்துரையாடல்

ஆய்வுப்பொருள் :- "பெரியபுராணத்தில் சில சிந்தனைகள்"

1. "திலகவதியார் நிறைவு நிலை"
2. "பொய்யடிமை இல்லாத புலவர் யார்?"
3. "திருநாளைப்போவாரின் வீடுபேற்று நிலை"

இணைப்பாளர் : திரு. டி. என். இராமச்சந்திரன்

பங்கேற்போர் :

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, டாக்டர் திரு. சொ. சிங்காரவேல

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன்,

பேராசிரியை திருமதி. ப. நீலா, வித்துவான் திரு. கா. ம. கண்ணப்ப

நன்றியுரை : டாக்டர்திரு. கு. சுந்தரமூர்த்தி

உ

குருபாதம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

300 ஆவது ஆண்டு நிறைவு விழா நினைவாகத்

திருநெறிய் தெய்வத் தமிழ் மாநாடு

முதல் திருநாள்

அகச்சந்தானாசாரியர் திருநாள்

[திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞானதரிசனிகள், பரஞ்சோதிமாமுனிகள்]

17—5—89 புதன்] [மாலை 6-30 மணி

வரவேற்புரை : வித்துவான்

ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்.

தொடக்கவுரை :

தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

காஞ்சிபுரம்.

விரிவுரைகள் :

டாக்டர் திரு. எஸ். என். கந்தசாமி

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

— மூத்த திருப்பதிகங்கள் – ஓர் ஒப்பு நோக்கு

சிவாகம சேகரன்

டாக்டர் திரு. என். ஆர். பட்

பிரெஞ்சு இந்தியப் பண்பாட்டு ஆய்வுநிறுவனம், பாண்டிச்சேரி.

— வேதாகமங்களின்வழிக் கூறப்பெறும் சைவமெய்ப்பொருள் இயல்பு

கலைநிகழ்ச்சி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிகுலேஷன் பள்ளி

மயிலாடுதுறை.

இரண்டாம் திருநாள்

புறச்சந்தானசாரியர் திருநாள்

[மெய்கண்டதேவர், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம்]

18—5—89 வியாழன்] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

வித்துவான்

ஸ்ரீமத் மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

கட்டளை விசாரணை, மௌனமடம், திருச்சிராப்பள்ளி.

சிறப்புரை :

டாக்டர் திரு. எஸ். முத்துக்குமரன்

துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.

விழிவுரை :

பேராசிரியர்

திரு. தி. வே. கோபால ஐயர்

பிரெஞ்சு இந்தியப் பண்பாட்டு ஆய்வுநிறுவனம், பாண்டிச்சேரி.

— திருமுறைகளில் காணலாகும் பாட வேறுபாடுகள்

இன்னிசை விரிவுரை

ஹரிகதாவாணி

திருமதி. டி. ஆர். கமலாமூர்த்தி

தஞ்சை.

— காரைக்காலம்மையார்

மூன்றும் திருநாள்

ஸ்ரீ அருள்நமச்சிவாயர் திருநாள்

19—5—89 வெள்ளி] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி

தருமபுரம்.

தொடக்கவுரை :

மாண்புமிகு. கோ. சி. மணி

வேளாண்மைத்துறை அமைச்சர், தமிழக அரசு, சென்னை.

சிறப்புரை :

திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார்
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரைகள் :

திரு. சி. சு. மணி
— சிவஞானபோதப் பேருரைத்திறன்

திரு. டி. என். இராமச்சந்திரன்
— பெரியபுராணத்தில் காணும் நுட்பங்கள்

தேவார இசையரங்கு

ஸ்ரீ மீனாட்சி நாடி சோதிடம்
திரு. ஏ. நல்லகுருந்தப்பசுவாமி குழுவினர்
சென்னை.

நான்காம் திருநாள்

20—5—89 சனி] [மாலை 6-30 மணி

காழி ஸ்ரீ கங்கை மெய்கண்டார் திருநாள்

வரவேற்புரை :

வித்துவான் திருமதி. ப. நீலா
தருமபுரம்.

விரிவுரைகள் :

பேராசிரியர்
டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி
அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம். தருமபுரம்.
— சங்க இலக்கியங்களில் சிவபரம்பொருள்

பேராசிரியர்
திரு. மா. வைத்திலிங்கம் & திரு. மா. கோடிலிங்கம்
திண்டுக்கல்.
— பரிபாடலில் இசை அமைவு

இரவு 9-00 மணி

இன்னிசை

கௌரி ஆறுமுகம் குழுவினர்
கூறைநாடு, மயிலாடுதுறை.

ஐந்தாம் திருநாள்

காழி ஸ்ரீ பழுதைகட்டிச் சிற்றம்பலநாடிகள் திருநாள்

21—5—89 ஞாயிறு] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :

திரு. சி. ஆர் குஞ்சிதபாதம் ஐயர், பி. ஏ., பி. எல்.,
வழக்குரைஞர், மயிலாடுதுறை.

விரிவுரைகள் :

டாக்டர் திரு. சு. சுந்தரமூர்த்தி

— சங்க இலக்கியங்களில் திருமால்

பேராசிரியர்
திரு. மா. வைத்திலிங்கம் & திரு. மா. கோடிலிங்கம்

— சிலப்பதிகார இசைத்திறன்

இரவு 9-00 மணி

பொம்மலாட்டம்

"சிவசக்தி"

ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினர்
மயிலாடுதுறை.

ஆறும திருநாள்

காழி ஸ்ரீ பழுதைகட்டிச் சம்பந்தமுனிவர்திருநாள்

22—5—89 திங்கள்]]மாலை 6-30

வரவேற்புரை :

திரு. ஆர். சிவபுண்ணியம் பி. ஏ., பி. எல்.,
கூடுதல் அரசுத்துறை வழக்குரைஞர், மயிலாடுதுறை.

விரிவுரை :

பேராசிரியர்
திரு. மா. வைத்திலிங்கம் & திரு. மா. கோடிலிங்கம்
திண்டுக்கல்.

— திருமுறைப் பண்ணிசை அமைவு

வழக்காடு மன்றம்

பொருள் : "இன்றைய நிலையில் தமிழ் வளர்ந்துள்ளது என்று கூறுவது குற்றம்"

நடுவர் :

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன்
மயிலாடுதுறை.

வழக்குத் தொடுப்பவர் :
டாக்டர்
திரு. ந. மெய்ப்பொருள்
பூண்டி.

வழக்கு மறுப்பவர் :
கவிஞர்
திரு ஞானச்செல்வன்
திருவாரூர்.

இரவு 9-00 மணி

விகடம்

குடந்தை திரு. சந்தர் குழுவினர்
சென்னை.

ஏழாம் திருநாள்

சிவபுரம் ஸ்ரீ ஞானப்பிரகாசர் திருநாள்

23—5—89 செவ்வாய்] [மாலை 6-30 மணி

(திருக்கல்யாணத் திருநாள்)

வரவேற்புரை :

திரு. வி. ஆறுமுகம் பிள்ளை ஐ. ஏ. எஸ்., (ஓய்வு)
மயிலாடுதுறை.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவுநிறைவுரை:
செந்தமிழ்ச்செல்வர்
டாக்டர் திரு. எம். வி. ஜயராமன்
பெங்களூர்.

விரிவுரைகள் :

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி
— சங்க இலக்கியங்களில் கொற்றவை

டாக்டர் திரு. த. அமிர்தலிங்கம்
ஆசிரியர், திருக்கோயில்.
— எம்பிரான் சம்பந்தன்

திருக்கோயில் திருக்கல்யாண உரைநிகழ்ச்சி :
வித்யா வாசஸ்பதி திரு. பி. இராமதாச ஐயர்
— திருமணத் தத்துவம்

இரவு 9-00 மணி
பக்தித் திரைப்படம்

எட்டாம் திருநாள்
சிவபுரம் ஸ்ரீ தத்துவப் பிரகாசர் திருநாள்
24—5—89 புதன்] [மாலை 6-30 மணி

வரவேற்புரை :
செந்தமிழ்ப்புரவலர்
திரு. இரா. இராஜசேகரன், பி. எஸ்சி., பி. எல்.,
மயிலாடுதுறை.

சிறப்புரை :
திரு. இரா. வேலு, பி. ஏ.,
நகராட்சி ஆணையர், மயிலாடுதுறை.

விரிவுரை :
டாக்டர் திரு. சு. சுந்தரமூர்த்தி
— சங்க இலக்கியங்களில் முருகன்

இரவு 8-00 மணி
பரதநாட்டியம்

பரதநாட்டிய சூடாமணி, கலா ரஞ்சனி, பரதகலாவல்லி,
செல்வி. ஹிமஜா பாலசுப்பிரமணியம்
சென்னை.

நட்டுவாங்கம்
திருமதி. உமா ஆனந்த் குழுவினர்

ஒன்பதாம் திருநாள்

திருவாரூர் செட்டித் தெரு

ஸ்ரீ பழுதைகட்டி ஞானப்பிரகாசர் திருநாள்

25—5—89 வியாழன்] [மாலை 6–30 மணி

வரவேற்புரை :

திரு. எஸ். பாஸ்கரன் பி. ஏ., பி. எல்.,
வழக்குரைஞர், மயிலாடுதுறை.

சிறப்புரை :

திரு. பு. மா. ஜெயசெந்தில்நாதன், எம். ஏ., பி. எட்.,
பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

விரிவுரை :

டாக்டர் திரு. கு சுந்தரமூர்த்தி
— சங்க கால வாழ்வியல்

பட்டி மன்றம்

பொருள் : மழை பொழியாமைக்குக் காரணம்
மக்களா? தெய்வமா?

நடுவர் :

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி

மக்களே !	தெய்வமே !
	டாக்டர்
திரு. சாமி. கிருட்டிணமூர்த்தி	திரு. சி. சிவசங்கரன்
திரு. தெ. இராசாமணி	திரு. இரா. மருதநாயகம்
திரு. சு. முத்துக்கிருட்டிணன்	திரு. இரா. செல்வநாயகம்

இரவு 9-00 மணி

கலைநிகழ்ச்சி

அறிவாலயம் மழலையர்பள்ளி, மயிலாடுதுறை.

பத்தாம் திருநாள்

குருபூசைத் திருநாள்

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் திருநாள்

26—5—89 வெள்ளி] [காலை 9-00 மணி

வரவேற்புரை :

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி
தருமபுரம்.

ஆசியுரை :

திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

விரிவுரைகள் :

டாக்டர் திரு. சு. சாமிஐயா
சிதம்பரம்.
— மழுவாடிப் புராணம்

திரு. த. அகரமுதல்வன்
பூம்புகார்
— தந்திவனப் புராணம்

திரு. இரா. மருதநாயகம்
தருமபுரம்.
— புஷ்பவிதி

டாக்டர் கோமதி சூரியமூர்த்தி
மதுரை.
— சிவபூசை அகவல்

காலை 10-00 மணி

ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் சிறப்பு வழிபாடு

குருபூசை விழாமலர் :-

''திருவருட் செய்தி'' (மூன்றும் தொகுதி)
(தருமை 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமணியின் அருளாசித்தொகுப்பு)

காலை 10-15 - 12-00 மணி

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு

நண்பகல் 1-00

மாகேசுவரபூசை

26—5—89 வெள்ளி] **[மாலை 5-30 மணி**

பத்தாம் திருநாள்

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் திருநாள்

வரவேற்புரை :

திரு. இர. பாலசுப்பிரமணியன்

முதல்வர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை.

விரிவுரைகள் :

புலவர் திரு. மு. வைத்தியநாதன்

திருச்சிராப்பள்ளி.

— குரு வழிபாடு

புலவர் திரு. ம. சிவசம்பு

பாளையங்கோட்டை.

— இலிங்க வழிபாடு

வித்துவான் திரு. தா. குருசாமி தேசிகர்

மதுரை.

— சங்கம வழிபாடு

திரு. குழ. சுப்பிரமணியன்

திருச்சிராப்பள்ளி.

— சைவசமய சாதனங்கள்

மாலை 6-00 மணி

தருமை ஆதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

குருமூர்த்த ஆலய வழிபாட்டுக்கு எழுந்தருளல்

இரவு 9-00 மணி

வில்லிசை

கீழமணக்குடி **திரு. மு. பச்சைமுத்து குழுவினர்**

— மணிவாசகர்

பதினோராம் திருநாள்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருநாள்

பட்டினப்பிரவேசத் திருநாள்

27—5—89 சனி] [காலை 7-00 மணி

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில்
சிவபூசகர்கள் சிவபூசை செய்தல்.

வரவேற்புரை : காலை 9-30 மணி

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்
தருமபுரம்.

வாழ்த்துரை :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
கயிலை மாமுனிவர்
**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள்**

விரிவுரைகள் :

டாக்டர் திரு. எஸ். கங்காதரன்
மதுரை.
— திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல்

டாக்டர் திரு. சு. சுவர்ணகாளீசுவரன்
திருவையாறு.
— முத்திநிச்சயம்

வித்துவான் திரு. சு. மு. சுந்தரராசன்
திருவாரூர்.
— சொக்கநாத வெண்பா

திரு. மா. பாலசுப்பிரமணியன்
கோவை.
— சிவபோகசாரம்

திரு. இரா. செல்வநாயகம்
தருமபுரம்.
— சொக்கநாதக் கலித்துறை

காலை 10-00 மணி ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

நண்பகல் 1-00 மணி மாகேசுவர பூசை

27—5—89 சனி] [மாலை 5-30 மணி

ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருநாள்

வரவேற்புரை :

அறப்பணிச் செல்வர்
டாக்டர் திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை
சிதம்பரம்.

சிறப்புரை :

திரு. வ. இராமதாசு, ஐ. ஏ. எஸ்.,
ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

விரிவுரைகள் :

வித்துவான் திரு. நீ. சு. சுந்தரராமன்
மதுரை.
— சோடசகலாப் பிராசாத சட்கம்

திரு. பா. சிவநேசன்
தருமபுரம்.
— ஞானப்பிரகாசமாலை

புலவர் திரு. கே. கணபதி
தருமபுரம்.
— நவரத்தினமாலை

மாலை 7-00 மணி

இன்னிசை

தருமை ஆதீன இசைப்புலவர்
சீர்காழி டாக்டர் திரு. கோ. சிவசிதம்பரம்
குழுவினர் - சென்னை.

இரவு 10-00 மணி

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பட்டினப்பிரவேசம்

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 6

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில - சித்திரை 10—5—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

"குருவருள் போற்றிக் — — குணம்பல பெறுவோம்!"

அணிவிழாக் காண வாரீர் :

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப் பெருவிழா நிகழும் சுக்கில ஆண்டு, வைகாசித்திங்கள் 13 ஆம் நாள் (26—5—89) வெள்ளிக்கிழமை, திருவோண விண்மீன் கூடிய, தேய்பிறை சஷ்டி நாளில், தருமை ஆதீனத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஜீவசமாதிகூடி, சிவலிங்கப் பிரதிட்டை செய்யப்பெற்று, பரிவார தெய்வங்களுடன் சிவாலயமாகத் திகழும் அருள்மிகு. ஞானம்பிகை உடனுறை அருள்மிகு. ஞானபுரீசுவரர் திருக்கோயில் ஆண்டுப் பெருந் திருவிழாவும் வைகாசி 4 ஆம் நாள் கொடியேற்றத்துடன்

தொடங்கிப் பத்து நாள்கள் நடைபெறும். 27—5—89 சனிக்கிழமை தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பட்டினப் பிரவேசமாக எழுந்தருளி அன்பர்களுக்கு அருட்காட்சி வழங்கி அருள்வார்கள். குருபூஜை விழா நாள்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் மூன்று நாள் சைவசித்தாந்தக் கருத்தரங்கும் நிகழவுள்ளன. சைவப்பேரன்பர்களைக் குருபூஜைப் பெருவிழாப் பொலிவுகண்டு குருமூர்த்திகளைத் தரிசித்து அருள்பெற்று மகிழ ஞானசம்பந்தம் அன்புடன் அழைக்கிறது.

ஆதீனத் தோற்றம் :

தமிழகத்துச் சைவ ஆதீனங்களுள் நானூற்றைப்பது ஆண்டுக் காலப் பழமையும், பெருமையும் பெற்றிலங்குவது திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம். கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் திருவாரூரில் திருக்கயிலாய பரம்பரையில் ஞானாசிரியராக வீற்றிருந்த கமலை ஞானப்பிரகாச தேசிகரின் மாணவர்களுள் ஒருவராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர், தம் ஞானாசிரியரின் கட்டளைக்கு இணங்கத் தஞ்சை மாவட்டம், காவிரி ஆற்றின் தென்கரையில், பாடல்பெற்ற சிவதலங்களுள் ஒன்றாகிய மயிலாடுதுறைக்குக் கிழக்கே இரண்டுகல் தொலைவில், தருமன் பூசித்துப் பேறுபெற்ற வில்வாரண்யமாக விளங்கிய தருமபுரம் என்ற சிற்றூரில் 'ஞானப் பிரகாசன் திருமடம்' என்ற பெயரில் தருமபுர ஆதீனத்தை நிறுவியருளினார். தம் ஞானாசிரியர் பரிபூரணம் எய்திய பின்னர், தருமையிலேயே தங்கியிருந்து, தம்மை நாடிவரும் பக்குவிகளுக்குச் சிவஞானோபதேசம் செய்து, ஸ்ரீ ஆனந்தபரவசர், ஸ்ரீ சச்சிதானந்தர் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் முதலிய மாணாக்கர்களுக்குத் தீட்சைகள் செய்வித்து, திருவருளால் அளவற்ற அருளற்புதங்கள் நிகழ்த்தி, ஞானப் பனுவல்கள் எட்டு அருளி ஸ்ரீ குருஞானசம்பந்தர் தருமபுரத்திலேயே ஜீவசமாதி கூடியருளினார்.

இளமையிற் கனிந்த ஞானம் :

தென்பாண்டி நாட்டுத் திருவில்லிபுத்தூர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் அவதரிக்கும் பேறு பெற்றது. பரம்பரை பரம்பரையாய்ச் சிவநெறி வழாது அடியவர்களைப் பேணி, வேளாண்தொழிலில் தலைப்பட்டு நின்ற கார்காத்த வேளாளர் மரபில் வந்த திரு. சுப்பிரமணிய பிள்ளை, திருமதி. மீனாட்சி அம்மையார் அருந்தவ மகவாய்த் தோன்றிய பிள்ளையார் ஞானசம்பந்தர் என்ற பிள்ளைத் திருநாமம் பெற்று வளர்ந்தார். குலவழி வந்த சைவசமய

ஊற்றமும் பண்டை வினைவழி வந்த ஞானமும்கூடப் பெற்றோருடன் மதுரை சென்ற பிள்ளையார் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் திருவடிகளில் பெரும்பற்றுக்கொண்டவராய், இவ்வுடற்குத் தாய்தந்தையராகிய உம்மோடு வாரேன், என் உயிர்க்குத் தாய்தந்தையர் இவ்வாலயத்துள் உள்ளனர், அவர்களோடு இங்கேயே தங்குவேன் எனக்கூறி ஆலவாய் அண்ணல் வழிபாட்டில் தலைநின்றார். பொற்றாமரைத் தடாகக் கரையில் அடியவர் பலரும் சிவபூசை செய்வதைப் பார்த்த ஞானசம்பந்தர் தாமும் சிவபூஜை செய்யும் விழைவுடையராய்ப் பெருமானிடம் விண்ணப்பிக்க, 'திருக்கோயில் பொற்றாமரைத் தடாகத்தின் ஈசானிய மூலையில் பெட்டகக் கோயிலுள் இருக்கிறோம்! 'எடுத்துப் பூசிக்க' என அசரீரி எழுந்தது. 'இட்டெடுத்தார் போல' ஸ்ரீ சொக்கநாதப் பெருமானைப் பெட்டகக் கோயிலோடு "கண்ணுக்கினிய பொருளாகக்" கைவரப்பெற்று நாளும் சிவபூசையில் தலைநின்றார்.

ஞானம் விளைந்த நாள் :

சிவனருள், குருவருள் இன்றி எய்தப்படாது என்பது சைவ மரபு. குருவழி தீக்கை முதலியன பெற்று, சிவபூஜையைக் குருநாதர் எழுந்தருள்வித்துத் தரச் செய்தலே நியமமாகும். 'தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வாராது' 'குருவில்லா வித்தை பாழ்' என்பன நாட்டார் வழக்காறுகள். ஸ்ரீ சொக்கநாதப் பெருமானிடமே நல்ல குருநாதரை அடைவிக்கப் பாடுகிடந்து பிள்ளையார் விண்ணப்பித்தார். சைவப் பழந்தலங்களுள் ஒன்றும் மூலாதாரத் தலம் என்றும், பிருதுவித்தலம் என்றும், பிறக்க முத்தி தரும் தலம் என்றும் போற்றப்பெறும் 'கமலை' எனப் பெயரிய 'திருவாரூர் செல்க' என அசரீரி எழுந்தது. ஆரூர் சென்று, சித்தீச்சரம் எனப் பெயரிய தென்முகக் கடவுள் திருமுன்பு கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசரைக் கண்டு தொழ, திருவருள் உணர்த்த பிள்ளையார் வரவுணர்ந்திருந்த குருநாதர் இவரை ஏற்றுத் தீக்கை முதலியன செய்வித்து மாணாக்கராய்க் கொண்டருளினர். அதி தீவிரப்பக்குவம் பெற்ற ஞானசம்பந்தர் கைவிளக்கேந்தி, குருநாதர் இல்லம் செல்ல ஆசாரியர் வாயிலில் 'நிற்க' எனப் பணிக்க இரவெல்லாம் நின்றிருந்தார். இரவு பெய்த பெருமழை] ஞானசம்பந்தர் மேல் சிறிதும் படவில்லை. கைவிளக்கும் அணைந்திலது. அறிந்த குருநாதர் மாணாக்கர் பரிபக்குவம் உணர்ந்து, தருமை சென்று பக்குவிகளுக்கு உபதேசம் செய்து வாழுமாறு பணித்தார். ஆசாரியரைப் பிரிய மனமின்றித் தனநிச்சை ஒன்றுமிலராய்த் தருமை போந்து திருமடங்கண்டனர் ஞானசம்பந்தர். குருவாய் நின்றநிலை நோக்கி உலகவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் என வணங்கி வழங்கலாயினர்.

பனுவல் படைத்த பண்பாடு :

சைவ ஆதீனத்தைத் தோற்றுவித்த முதல்வர் என்ற சிறப்போடு, அருள் ஞானநூல்கள் பலவும் இயற்றிய ஆசிரியர் என்ற பெருமையும் ஸ்ரீ குருஞானசம்பந்தருக்குஉண்டு. இடையறவு படாது ஸ்ரீ கண்ட பரமசிவன் முதலாக வளர்ந்து வரும் உபதேச பரம்பரையில் வந்த ஸ்ரீ குருஞானசம்பந்தர் சைவ தோத்திரம், சித்தாந்த சாத்திரம், கண்டனம், யோகம் முதலிய பலதுறை நூல்களையும் அருளிச் செய்தார். தம் ஆன்மார்த்த பூஜா மூர்த்தி மேல் சொக்கநாத வெண்பா, சொக்கநாதக் கலித்துறை என்ற சிவ தோத்திரங்களையும், தம்குருநாதர் மேல் பண்டாரக் கலித்துறை என்னும் ஞானப்பிரகாசமாலை, அவர் பரிபூரணம் எய்திய காலை இரங்கிப்பாடிய நவரத்தினமாலை முதலிய குருதோத்திரங்களையும் அருளிச்செய்தார். மெய்கண்ட சந்தானத்தில் சிவஞானசித்திநெறி விளக்கி எளிமையும் அருமையும் மிக்க சிவபோகசாரம் என்ற நூலை அனுபூதி வெண்பாக்களால் ஆக்கி அருளினார். சைவசித்தாந்தம் விளக்கும் தசகாரியத்தில் புதுநெறி காண்பாராய்த் திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் ஒன்றும் படைத்தார். சிவநெறி வழி ஆன்மானந்த வாதத்தில் தலை நின்றார்க்குச் சைவசித்தாந்த நெறி நின்று முத்தி நிச்சயம் என்ற தம் நூலின் வாயிலாகக் கண்டனம் தெரிவித்துச் சைவப் பரமுத்தியை உள்ளவாறு விளக்கியருளினார். திருக்கயிலாய பரம்பரையில் சீகாழி ஸ்ரீ சிற்றம்பலநாடிகள் வழியாக வளர்ந்து வந்த - திருக்கயிலாயபரம்பரைக்கே உரிய பிராசாத யோக நெறியைத் தம் ஞானாசிரியர் வழி நின்று 'சோடசகலா பிராசாத சட்கம்' என்ற நூலால் மேலும் தெளிவுபட விளக்கியருளினார். சிவஞானசித்தியாருக்குச் செய்யுள்வடிவில் 'ஞானாவரண விளக்கம்' என்ற விரிவு நூல் ஒன்றும் இவரால் இயற்றப்பட்டது. இந்நூல் முற்றாக இன்று கிடைத்திலது. எஞ்சிய நூல்கள் பல முறையும் 'குருஞானசம்பந்தர் அட்டகம்' என்ற பெயரில் தருமை ஆதீனத்தில் அச்சிடப்பட்டுள்ளன.

குருபூஜைக்கு முன்னாக ஒரு குடமுழுக்கு :

இவ்வாறு பன்னருஞ் சிறப்புக்கள் பெற்றுத் திகழும் குரு முதல்வரின் குருபூஜைப் பெருவிழாவை, ஆண்டுதோறும் புதுப்புது அங்கங்களோடும், உள்ளார்ந்த பக்திசிரத்தையோடும் கொண்டாடி வரும் தருமை 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், இவ்வாண்டுக் குருபூஜை விழாவையும் மிகச்சிறப்பாக நடத்தத் திருவுளம் பாலித்துள்ளார்கள். ஆதீன ஆன்மார்த்த பூஜாமூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் வழிபாட்டை ஞானபீடம் ஏறியநாள் தொடங்கி ஏறத்தாழ, பதினெட்டு ஆண்டுகளாக ஒருநாள் கூட

இடையறவு படாது தாமே இயற்றி வரும் பக்தி வைராக்கியமும், குருமுதல்வர் திருக்கோயிலை நாள்தோறும் காலையும், மாலையும் வழிபடும் உறைப்பும் மிக்க தருமைக் குருமணி அவர்கள், தருமை ஆதீன குருபரம்பரையில் தம் முன்னோராய்த் திகழ்ந்து பரிபூரணம் எய்திய குருமூர்த்திகளுடைய வழிபாடுகளையும் நியமமாய் நிகழ்த்தி வரும் பெருமைக்குரியவர்கள். சில திங்களுக்கு முன் தைமாசம் 29 ஆம் தேதி வடக்குக் குருமூர்த்தத்தில் 20, 21 ஆவதாகிய இருகுருமூர்த்த ஆலயங்களைப் புதிதாக எடுப்பித்தும், பழைய குருமூர்த்த ஆலயங்கள் 14 பதினான்கையும் பழுதுபார்த்துப் புதுப் பித்தும் சச்சிதானந்த விநாயகர் கோயிலைப் புதுப்பித்தும், பெருஞ் சிறப்போடு, குடமுழுக்குவிழாவை நிகழ்த்தியருளிய தருமைக் குருமணி அவர்கள், புதுப்பொலிவு பெற்று விளங்கும் தருமைக் குருமூர்த்த ஆலயங்களுக்குக் குருபூஜைநாளில் வழக்கம் போல் பரிவாரங்களுடன் வழிபாட்டுக்கு எழுந்தருளுவார்கள். அக் காட்சியைச் சைவர்கள் அனைவரும் கண்டு தரிசிக்க வேண்டுவது இன்றியமையாததாகும்.

ஞானசம்பந்தராக வாரீர்!

தருமை ஆதீனம் உலகெங்கும் வாழும் சைவத் தமிழ் அன்பர் களுக்கு ஆசாரிய பீடமாக விளங்குவது. 450 ஆண்டுகளுக்கு மேலாகச் சிவநெறியோடு செந்தமிழையும் வளர்த்து வரும் சிவஞானத் தமிழ்ப் பண்ணையாகத் திகழ்ந்து வருவது. சாரங் கொண்ட சைவசித்தாந்த நெறியை உலகறியச் செய்ய 'உலகு தழுவிய' சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் கண்டு பேணிக் காத்து வரும் பெருமைக்குரியது. மக்கள் மனவளம் குன்றி, அரசு பராமுகம் காட்டும் நேரத்திலும் தம் கட்டுப்பாட்டுள் இயங்கிவரும் இருபத்தேழு சிவாலயங்களைக் கண்ணெனப்போற்றிப் புரந்துவரும் சீர்மைமிக்கது. இத்தகு தொல்வரவுமிக்க தருமை ஆதீன ஞான நிலையத்தின் முதல்வர் குருபூஜை விழாவை நாடே முன்னின்று கொண்டாடும் கடமையும் பொறுப்பும் மிக்கது. பல்வேறு அங்கங் களுடன் கொண்டாடப் படவிருக்கும் தருமை ஆதீனக் குருபூஜை விழாவில் பங்கேற்க, எல்லாப்பணிகளையும் ஒதுக்கிவைத்துவிட்டுச் சைவ அன்பர்கள் தருமை நோக்கி அணிதிரண்டு வரவேண்டும் என ஞானசம்பந்தம் விரும்புகின்றது. விருப்போடு அழைக்கிறது. தருமைக்கு வாருங்கள்! குருவருள் பெற்றுத் திருவருள் சேருங்கள். ஞானசம்பந்தரை வணங்கி ஞானசம்பந்தராகுங்கள்!

"தமிழ்மணங்கமழும் கமலையம்பதிவாழ்
ஞானசம்பந்தனை வணங்கின்
ஊனசம்பந்தம் இல்லை வீடெளிதே" — குமரகுருபரர்

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வைத்தீசுவரன்கோயிலில் புதிதாகக் கட்டப்பெற்றுள்ள
ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயில்
திருக்குடமுழுக்குப் பெருவிழாவிற்கு எழுந்தருளியபோது
வழங்கியருளிய

ஆசியுரை

27—3—89

“கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடிஎம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே ”

— திருஞானசம்பந்தர்.

இராமாயணத் தொடர்புடைய தலம் :

தமிழகத்தில் இராமாயணத்துடன் தொடர்புள்ள தலங்கள் பல உள்ளன. அவற்றுள் புள்ளிருக்கு வேளூராகிய வைத்தீசுவரன் கோயிலும் ஒன்று. புள்வேந்தர்களாகிய சம்பாதியும், ஜடாயுவும் இத்தலத்திறைவனை வழிபட்டனர். “தள்ளாய சம்பாதி சடாயு என்பார் தாம்இருவர், புள்ளானார்க்கு அரசனிடம்” என்றும், “யோசனை போய்ப் பூக்கொணர்ந்தங்கு ஒருநாளும் ஒழியாமே, பூசனை செய்தினிதிருந்தான்” என்றும் ஞானசம்பந்தர் தேவாரம் கூறுவதால் இதனை நன்கு உணரலாம். “மெய்சொல்லா இராவணனை மேலோடி ஈடழித்துப் பொய் சொல்லாது உயிர் போனான் புள்ளிருக்கு வேளூரே ” என்றும், “ஆகாயம் தேரோடும் இராவணனை அமரின் கண், போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே” என்றும், “மறங்கொண்டங் கிராவணன் தன்வலிகருதி வந்தானைப்,புறங்கண்டசடாயு என்பான் புள்ளிருக்கு

வேளூரே" என்றும் ஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார். எனவே சீதாபிராட்டியை இராவணன் கவர்ந்து ஆகாய வழியாகச் செல்லும்போது சடாயு அவனுடன் போர்செய்து உயிர் நீங்குமுன் இராமபிரானுக்கு இச்செய்தியை அறிவித்து உயிர் துறந்தான். இதனைத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் அறிகிறோம். இறந்த ஜடாயுவிற்கு இராமபிரான் இத்தலத்தில் ஈமக்கிரியை செய்தார் என்றும், அதன் அடையாளமாகவே ஜடாயுகுண்டம் ஆலயத்தில் உள்ளது என்றும் சொல்லப்படுகிறது.

சீதையைக் கவர்ந்த கள்வன் இராவணன் என்பதை இராம பிரானுக்குக் காட்டிய பிறகே அனுமன் பணி முக்கியத்துவம் பெற்றது. இலங்கைக்கு யார் செல்வது என்ன பிரச்சினை எழும்பியது அனுமன் சென்றான்; வெற்றியுடன் திரும்பினான். ஜடாயுவிற்குக் கோயிலில் வழிபாடு நடைபெறுகிறது. ஜடாயு வரலாற்றுடன் தொடர்புடைய அனுமனுக்குக் கோயிலின் எதிரில் இப்போது கோயில் கட்டப்பெற்று வழிபாடும் நடைபெற உள்ளது பொருத்தமானதே. இப்புனிதப் பணியில் பங்கு கொண்டமை மகிழ்ச்சியளிக்கிறது.

புள்ளிருக்குவேளூர் :

இத்தலத்தின் திருப்பெயர் புள்ளிருக்குவேளூர் என்பதாகும். தேவார ஆசிரியர்கள் இத்தலத்தை இப்பெயரால் குறிக்கின்றனர். புள்ளிருக்குவேளூர் என்பது பிரித்துப் பொருள்காணும் தகையது. புள்+இருக்கு+வேள்+ஊர் எனப்பிரிக்கலாம். இங்ஙனம் பிரிக்கும் பொழுது, 'புள்' என்பது சம்பாதியையும் சடாயுவையும் 'இருக்கு' என்பது ரிக் வேதத்தையும் 'வேள்' என்பது முருகனையும் 'ஊர்' என்பது ஊர்கின்ற சூரியனையும் குறிக்கும். இந்நான்கும் பூசித்த தலம் இது என்பதனால் இப்பெயர் பெற்றது. இவற்றுள் சடாயுவும் சம்பாதியும் பூசித்தனர் என்பதற்குத் திருஞானசம்பந்தர் தேவாரமே சான்று தருகிறது. ரிக்வேதம் பூசித்தது என்பதை "வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே" என்னும் ஞானசம்பந்தர் வாக்கால் அறியலாம். இருக்குவேதம் மந்திரங்கள் நிறைந்தது. எனவே இருக்குவேதம் பூசித்தது என்று கொள்கின்றனர். முருகப் பெருமான் பூசித்தார் என்பதுவரலாறு ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு வலப்பக்கம் முத்துலிங்கப் பெட்டகம் உள்ளதை இன்றும் காணலாம். முத்தையா பூசிக்கும் லிங்கம் என்ற பொருளில் தான் முத்துலிங்கம் எனப் பெற்றது. இப்பூசை முத்தையா பூசிக்கும் ஐதிகத்தில் தினமும் காலை சந்தியானதும் நடைபெறுகிறது. சூரியன் பூசித்த தலம் இது என்பதற்குச் சான்றாக

இன்றும் ஆண்டில் இருமுறை தட்சணாயன புண்யகாலத்தில் புராட்டாசியிலும் உத்ராயண புண்யகாலத்தில் மாசியிலும் மூன்று மூன்று நாட்கள் சூரியனின் ஒளி பல மண்டபங்களையும் கடந்து சென்று வைத்தியநாதப் பெருமான் மீது பட்டு மீள்வதனைக் கண்ணாரக் காணமுடிகிறது. இது ஓர் அற்புதம் அன்றோ!

சடாயு, சம்பாதி என்பவர்களால் பூசிக்கப் பெற்றது என்பதால் இது இராமாயண வரலாற்றோடு தொடர்புடையது. அதற்குச் சான்றாகப் பூம்புகார் செல்லும் வழியில் சம்பாதி வனம் என்று ஒருநந்தவனமும், ஜடாயுகுண்டம் என்னும் ஒருபகுதி திருக் கோயிலுக்குள்ளும் உள்ளன. திருஞானசம்பந்தர், '' கள்ளார்ந்த பூங்கொன்றை'' என்று தொடங்கும் வேளூர்ப் பதிகத்தில் முதல் பாடலில், சடாயு, சம்பாதி பற்றிய குறிப்பினையும் அடுத்து வரும் 2, 4, 6, 8, 9, 10 ஆகிய பாடல்களில் சடாயுவைப் பற்றியும் 3, 5, 7 ஆகிய பாடல்களில் சம்பாதியைப் பற்றியும் தனித்தனியேயான குறிப்புக்களையும் அருளுகின்றார்.

திரைப்படக்கலை - இன்றைய நிலை :

இத்தகைய சமய வரலாற்றுச் சிறப்புடைய இத்திருக் கோயிலின் எதிரில் சில ஆண்டுகளுக்கு முன்பு, திரையரங்கு ஒன்றினை அன்பர் திரு. கோவிந்தசாமிப்பிள்ளை கட்டினார். அப் பொழுதே பக்திப் பரவசத்தோடு விளங்கும் இப்பகுதியில் இவ் அரங்கு கட்டுவது அவ்வளவு நல்லதல்ல என்று அறிவுறுத்தப் பெற்றது. அதனை அவரே இன்று நினைவு கூர்ந்து அதற்குப் பிராயச் சித்தமாக இவ் ஆஞ்சநேயர் திருக்கோயில் கட்டப்பெற்றது என்றார். எனினும் இதுபோதுமான பிராயச்சித்தமாகாது. கட்டிய இவ் அரங்கினை எந்த வித மாறுபாடும் செய்யாமல் அப்படியே திருமணமண்டபமாக ஆக்கிவிடுவது அனைவருக்கும் நலம் பயக்கும்; அவருக்கும் நலமலி செல்வம் பெருகும். திரைப்படக் கலை தாழ்ந்த கலை அன்று. எனினும் திரைப்படத்தில் காட்டப்பெறும் கருத்துக் களும் நடைமுறைகளும் இன்று தரம் குறைந்தவையாகப் போய் விட்டமையால் அத்திரைப்படக் கலையை வெறுக்க வேண்டிய தாகிறது. உதாரணமாக ஒரு இடம் நல்லதா? கெட்டதா? என்பது அதனைப் பயன்படுத்துவோர் மனநிலையைப் பொறுத்தே இருக்கிறது. அவ்விடம் யோகத்திற்குப் பயன்படுத்தப்படுமானால் அது உயர்ந்தது; அதுவே போகத்திற்குப் பயன்படுத்தப்பட்டால் அது தாழ்ந்தது. எனவே இடம் எப்படி இருப்பினும் அதைப் பயன்படுத்தும் நோக்கத்தால் அது உயர்வு, தாழ்வு பெறுகிறது. இதனை நீதி வெண்பா,

" வல்லவர் பால் கல்விமதமா ணவம் போக்கும்
அல்லவர் பால்கல்வி யவை ஆக்கும் — நல்லிடத்தில்
போகம் பயில்வார் உயர்ந்தோர் இழிந்தோர்கள்
போகம் பயில்வார் புரிந்து "

என்று கூறுகிறது.

ஆஞ்சநேயர் - ருத்திராம்சம் :

ஸ்ரீ ஆஞ்சநேயர் சிவாம்சம் பொருந்தியவர். அவர்ருத்திரனின் அம்சம் என்று இராமாயணம் கூறுகிறது. இராமன் கூற்றாகவே, கம்பர் இதனை வெளிப்படுத்துகின்றார். முதன்முதல் அனுமனை இராமன் கண்டபோது, " இவன் விரிஞ்சனோ? விடைவல்லானோ? என்று கேட்கிறான். பின்னே அனுமனின் பேருருவினைப் பார்த்துத் தம்பியை நோக்கி, மறைகளாலும் ஞானத்தாலும் அளந்து அறிய முடியாத பரம்பொருளே இவ்வடிவு எடுத்து வந்திருக்கிறது " என்று இராமன் கூறும் இடத்திலும் கம்பர் இதனை விளக்குகிறார்.

" தாட்படாக் கமலம் அன்ன
 தடங்கணான் தம்பிக்கு அம்மா
இழ்ப்படா நின்ற நீக்கிக்
 கிளப்ப அரிது ஆகி என்றும்
நாட்படா மறைகளாலும்
 நவைபடா ஞானத்தாலும்
கோட்படாப் பதமே! ஐய!
 குரக்கு உருக்கொண்டது என்றான். "

கம்பன் கவிக்குச் சான்று :

இவ் ஆஞ்சநேயர் ஏழு சிரஞ்சீவிகளில் ஒருவர் என்பர். அசுவத்தாமன், மாபலி, வியாசன், அனுமன், விபீஷணன், கிருபாசாரியர், பரசுராமன் முதலானவர்கள் அவர்கள். இராமாயணக் காப்பியப்போக்கின்படி இவ் அனுமன் வாயுவிற்கும் அஞ்சனைக்கும் பிறந்த புதல்வர் ஆவர். ஐந்து பூதங்களில் ஒன்றாகிய வாயு பெற்றெடுத்த பிள்ளை இவர் என்பதற்கு,

" அஞ்சிலே ஒன்று பெற்றான்
 அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக
 ஆரியற் காக ஏகி

அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக்கண்டு அயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன் நம்மை அளித்துக் காப்பான்."

என்னும் அனுமன்துதி சான்றாக அமைகிறது. இப்பாடலில் ஐந்து பூதங்களையும் இணைத்துக் கவிபாடியுள்ள கம்பரின் திறம் நினைந்து வியத்தற்குரியது. அஞ்சிலே ஒன்று பெற்றான் என்பது வாயுவின் மைந்தன் என்பதையும் அஞ்சிலே ஒன்றைத்தாவி என்பது கடலாகிய நீரைத்தாவி என்பதையும் அஞ்சிலே ஒன்று ஆறு ஆக என்பது, ஆகாயத்தின் வழியாகச் சென்றான் என்பதையும் அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக்கண்டு என்பது நிலம் பெற்றெடுத்த மகள் சீதை என்பதையும் அஞ்சிலே ஒன்றை வைத்தான் என்பது தீயை இலங்கையிலே வைத்தான் என்பதையும் குறிப்பதாகும்.

சொல்லின் செல்வன் :

இவ் அனுமனின் சிறப்பாகப் பலரும் கூறுவது 'சொல்லின் செல்வன் இவன்' என்பதாகும். சொல்லின் செல்வன் என்றால் எந்தக் கருத்தைக் கூறும்பொழுதும் அதில் சுருக்கமும் தெளிவும் அமையக் கூறுவதாகும். இத்தகுதி அனுமனிடம் இருந்தது என்பதற்குப் பல இடங்களைச் சான்றாகக் கூறலாம். எனினும் ஓரிடத்தை ஈண்டுச் சிந்திப்போம்.

சீதையை, இலங்கையில் அனுமன் தேடிக் கண்டு வந்த செய்தியினை இராமனிடம் கூறுகிறான். அப்பொழுது, இலங்கைக்குத் தான் சென்று வந்த விதத்தைப் பற்றியோ அங்கு நிகழ்ந்த போர் நிகழ்ச்சியைப் பற்றியோ முதலிலிருந்து கூறாமல் சீதையை நான் இலங்கையில் கண்டேன் என்றும் கூறாமல் 'கண்டனன்' என்றே தொடங்குகிறான். தான் சீதையைக் கண்டு விட்டேன் என்பதை இச்சொல்லில் புலப்படுத்தினான் ஆனாலும் இராமனுக்கு இருக்கும் கவலை எல்லாம் சீதை உயிரோடு இருக்கிறாள் என்பதைவிட அவள் கற்போடு இருக்கிறாளா? என்பதில் தான் உள்ளது. இதனை ஊகத்தால் உணர்ந்த அனுமன் "கண்டனன் சீதையை" என்று கூறாமல், "கண்டனன் கற்பினுக்கு அணியை" என்கிறான். சீதை கற்போடு இருக்கிறாள் என்பதை இவன் எப்படிக் கண்டான் என்று இராமன் நினைப்பானே என்று கருதிய அனுமன் சீதையின் தெளிவான கண்களால் அவள் கற்போடு இருந்தமையை

அறிந்தேன் என்று கூறுகிறான். "கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்" என்று அப்பாடல் தொடங்குகிறது. அடுத்து வருகிற வரிகளில் எங்கே கண்டேன் என்பதற்குரிய விடையையும் கூறி, எனவே இராமா! இனிக்கவலையை விட்டு விடுவாயாக! என்று ஆறுதலையும் கூறினான். இனி முழுப்பாடலையும் பார்ப்போம்.

"கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்;
அண்டர் நாயக! இனித்துறத்தி ஐயமும்
பண்டுள துயரும் என்று அனுமன் பன்னுவான்"

ஒருவரின் உள்ளக் கருத்தினையும் தெளிவினையும் எடுத்துக் காட்டுவது அவரின் கண்களே என்பது அறிஞர் துணிபு. நடைமுறை அனுபவத்திலும் காணலாம். இதனைத் தொல்காப்பியம்,

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும்"

என்னும் நூற்பாவினாலும், தஞ்சைவாணன் கோவை,

"கண்ணிற்சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே"

என்னும் தொடரினாலும் கூறுகின்றன. மேலும் பிரமசரியம் காத்துவரும் அனுமனுக்குக் கற்போடு விளங்கும் சீதாபிராட்டியின் தூய நிலையைப் புரிந்துகொள்வது சாத்தியமே ஆகும்.

வாழ்த்து !

இங்ஙனம் ருத்திர அம்சமாகவும் சொல்லின் செல்வனாகவும் விளங்கும் ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தியை அனுதினமும் அன்பர்கள் பக்திப் பரவசத்தோடு வழிபட்டு எல்லா நலங்களையும் பெறவும் இப்புண்ணியப் பணியில் ஈடுபட்டுள்ள அன்பர் கோவிந்தசாமிப் பிள்ளையும் அவர் தம் குடும்பத்தினரும் நலங்கள்பலவும் பெற்றுநாடு போற்றுமாறு வாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

அஞ்சனை பெற்ற அனுமனை வாழ்த்தி
நஞ்சினை அடக்கிய நாதரைப் போற்றுவோம்!

சிறுகதை

பித்தா...!

புலவர் திரு. சி. குமரேச பிள்ளை

சுசீந்திரம்.

ஆயாள் பார்வதியிடம் பள்ளிப்பிள்ளைகளுக்குத் தனிப்பற்றுதல்! அவள் எந்தக் குழந்தைகளையும் அடிப்பதில்லை; அதட்டுவதும்கூட இல்லை! அன்பாக வீட்டிற்கு அழைத்துச் செல்வாள். பள்ளியில் குழந்தைகளைத் தாயினும் சாலப் பரிவுடன் கவனிப்பாள். எனவே அவள் குழந்தைகளின் பெற்றோரிடம் தனிமதிப்புப் பெற்றுவிட்டாள் ஆசிரியைகளும் அவளிடம் தனிமதிப்பு வைத்திருந்தனர். பள்ளியின் வளர்ச்சிக்கு ஆயாவின் அன்புதான் காரணம் என்பது அனைவருடைய கருத்தும் ஆகும்.

பார்வதி நான்கு வருடங்களுக்கு முன் கையில் நான்கு வயதுச் சிறுவனுடன் குருஞானசம்பந்தர் பாலர் பள்ளியை அணுகி, 'என் மகனையும்பள்ளியில் சேர்த்துகொள்ளவேண்டும்' என்றுதாளாளரிடம் வேண்டினுள். அதற்கென்ன? சேர்த்துக்கொள்ளலாமே என்று கூறிய தாளாளர் தலைமை ஆசிரியையை அழைத்து 'இப்பையனின் தகுதியைப் பார்த்து வகுப்பில் சேர்த்துக்கொள்ளுங்கள்' என்ருர்.

ஆசிரியை தாளாளரைநோக்கி, 'இவர்கள் பள்ளிக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைத் தரவசதியில்லாதவர்கள், அதனால்தான் உங்களிடம் அனுப்பிவைத்தேன்' என்ருர். தாளாளர் அவளை உற்று நோக்கினர். இளம் விதவை; முகத்திலே சோகக்குறி. சமீபத்தில் தான் அவள் கணவன் இறந்திருக்க வேண்டும் எனத் தாளாளர் எண்ணி அவள் மீது இரக்கங்கொண்டு அவள் மகனைக் கட்டணமின்றிப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளச் சம்மதித்தார்.

நாட்கள் பல சென்றன. வழக்கம் போல் பார்வதி தன் மகனை அழைத்து வந்தாள். தாளாளர் அவளது வறுமைக் கோலத்தையும், அவளது மன வேதனையையும் புரிந்து கொண்டு, 'இப்பள்ளியில் ஆயா வேலைக்கு வருகிருயா' என்று கேட்டார். அச்சொல்லை எதிர் பார்க்காத பார்வதி திகைத்து நின்ருள். 'அம்மா, பயப்பட வேண்டாம்; காலை ஒன்பது மணிக்கு வந்தால் போதும். பக்கத்திலுள்ள பிள்ளைகளை அழைத்து வரவேண்டும். பள்ளி வேளைகளில்

அவர்களின் தேவையை அறிந்து கவனித்துக் கொள்ள வேண்டும். மாலையில் அவர்களை வீடு கொண்டு சேர்க்க வேண்டும். பிற நேரங்களில் உன்வேலைகளை நீ கவனித்துக் கொள்ளலாம். மாதம ரூ. 200 சம்பளம் கிடைக்கும். பிள்ளைகளின் பெற்றோருக்கு விருப்பம் ஏற்பட்டால் அவர்கள் தரும் உதவிகளையும் பெறலாம்' என்று கூறினார். பார்வதியின் முகம் மேகத்திடையே சந்திரனைப் போல் பிரகாசித்தது.

கூலி வேலைச் செய்து அன்றாடம் வாழ்க்கை நடத்திய கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட பார்வதி, கணவனுடன் வாழ்ந்து வந்த காலத்திலும் ரூ 200ஐக் கண்ணால் கண்டதில்லை; அவள் கணவன் இறந்த மூன்று வருட காலமாக அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளில் வேலை பார்த்து வருகிறாள். அவர்கள் வீட்டில் எஞ்சிய சோறு, பலகாரம், ஐந்து, ஆறுருபாய் இதைத்தவிரக் கண்டதில்லை. 200 ரூபாய் சம்பளம்! தன் மகன் முருகனை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என்ற தனது பலநாள் கனவு நிறைவேறுவதை எண்ணி உள்ளூர மகிழ்ந்தாள்.

மறுநாள் முதல் தன் பள்ளிப் பணியைத் தொடர்ந்தாள் ஆயாள் பார்வதி. பள்ளிச்சம்பளத்திற்கு மேல் பெற்றோரிடமிருந்தும் நன்கொடைகள் பார்வதிக்கு வந்து கொண்டிருந்தன.

ஒவ்வொரு ஆண்டு விழாவின்போதும் தாளாளர் குருஞான சம்பந்தர் பாலர் பள்ளி உயர்வுக்குப் பார்வதியின் உழைப்பும் ஒரு முக்கிய காரணம் என்று அறிந்து, பார்வதிக்குப் புடவை ஒன்று பரிசளித்து வந்தார். ஆண்டுகள் பல உருண்டோடின.

பார்வதி, பட்டதாரியாகிவிட்ட தன்மகன்முருகனுடன் தாளாளர் முன்வந்து நின்றாள். மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேசை மீது வைத்துவிட்டு முருகனையும், பார்வதியையும் உற்றுப்பார்த்தார் தாளாளர். ஆம், இப்பொழுது பார்வதியின் முகத்தில் சோகத்தின் பிரதிபலிப்பு இல்லை. மகனின் முன்னேற்றத்தில் உள்ளூரக்கொண்ட மகிழ்ச்சியின் பிரதிபலிப்பே காணப்படுகிறது. 'என்ன பார்வதி, உன் மகன் B. Sc., முதல்வகுப்பில் தேறிவிட்டான். இனி அவனுக்கு வேலை ஒன்று கிடைக்கவேண்டும்; திருமணம் ஆக வேண்டும். அத்துடன் உன்கவலை தீர்ந்தது. அவ்வளவுதானே' என்றார் தாளாளர். பார்வதியின் கண்கள் நன்றியறிதவோடு தாளாளரின் பாதத்தை உற்றுப்பார்த்தன. தாளாளர், 'அம்மா, கவலைப்படாதே. இதுவரை உன்னை வழி 'நடத்திய ஸ்ரீ தாணுமாலையர் இவற்றையும் ஒரு குறையும் இல்லாமல் நடத்திவைப்பார்' என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

முருகன் வேளாண்மைத்துறையில் எழுத்தராகப் பணிபுரிந்து வருகிருன். வாழ்க்கைத் துணைவி வள்ளியம்மையுடன் இன்ப வாழ்வு நடத்துகிருன் முருகன். முருகன் அம்மாவை அழைத்தான். "அம்மா, இனி நீங்கள் பள்ளிவேலைக்குச் செல்லவேண்டாம். உங்களுக்கு எல்லா வசதிகளும் இருக்கின்றன. உங்களுக்கு வேண்டியதை நான் வாங்கித் தருகிறேன்'' என்ருன். பார்வதி, 'முருகா, இந்த வாழ்வு நமக்கு ஸ்ரீ தாணுமாலேயர் அருளால் அமைந்தது. குருஞானசம்பந்தர் பாலர்பள்ளித் தாளாளர் ஸ்ரீ தாணுமாலேயர் ஆணையை நிறைவேற்றுபவராக இருந்து நமக்கு இத்தனையும் செய்தார். ஆகவே இந்த உடல் இருப்பது வரை நான் அந்தப் பள்ளிக்கு உழைக்க வேண்டும். அப்பள்ளியில் படிக்கும் பிள்ளைகளைப் பராமரிப்பதும் அவர்களைக் கூட்டிக்கொண்டு வீட்டிற்குச் செல்வதும் பள்ளியில் வேலைசெய்து தாளாளரின் மதிப்பைப் பெறுவதும் எனது கடமை. நீ அதில் தலையிடாதே' என்று கூறிவிட்டாள்.

முருகனின் மனைவி வள்ளியம்மை செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்தவள், சிறந்த சீர் வரிசைகளுடன் வந்தாள். தன் மாமியார் பள்ளிப் பணிக்குச் செல்வது அவளுக்கு இழிவாக இருந்தது. இதைப்பற்றித் தன் கணவனிடம் அடிக்கடி குறை கூறி வந்தாள். பார்வதியோ பள்ளியை நன்றியுணர்வுடன் நேசித்து வந்தாள். பள்ளிப் பிள்ளைகள் தன்னிடம் காட்டும் அளவு மிகுந்த அன்பும், பள்ளித்தாளாளர் காட்டும் பரிவும் அவள பள்ளிப் பணியை விட்டுச் செல்ல முடியாதவாறு தடுத்தன.

வள்ளியின் போதனையால் முருகன் மனவருத்தம் அடைந்தான். தாயின் செயல் அவனுக்கு வருத்தத்தைக் கொடுத்தது.

ஒருநாள் முருகன் தன் தாயைக் கடிந்துரைத்தான். தாய் மகனின் கடிந்துரையைப் பொருட்படுத்தாமல் பளளிக்குச் சென்று தன் பணிகளைச் செய்து வந்தாள. இதனால் மிக்க சினம் கொண்ட முருகன் தாயின் கன்னத்தில் ஓங்கி அடித்து விட்டான்.

தாய், பொங்கி வரும் அழுகையையும் அடக்கிக் கொண்டு தன் மகனின் கை பதிந்த கன்னத்தைத் தன் கையால் மறைத்து கொண்டு அடிப்பட்ட வேதனையுடன், தான்நாள்தோறும் வழிபடும் ஸ்ரீ தாணுமாலேயர் ஆலயம் சென்ருள். ஸ்ரீ தாணுமாலேயர் சந்நிதியில் நின்ருள்.

'பித்தா – பெருமானே – தாணுமாலேயா'! என்று கண்ணீர் வடிய நின்ருள். "பெருமானே, என் மகன் நல்லவன். தன்னுடைய அறியாமையினல் தாய்என்று என்னை எண்ணுமல் அடித்துவிட்டான்.

தாணுமாலையா! தாயை அடித்த பாபம் அவனைச் சாராமல் இருக்கட்டும். அவனுடைய அறியாமையை நீக்கி நல் அறிவைப் புகட்டி அருள் செய், இறைவா! பிள்ளைகள் செய்யும் குற்றத்தைப் பொறுத்து கொள்ளும் பித்தன் அல்லவா நீ" என்று வேண்டிக் கொண்டாள்.

பக்கத்தில் நின்ற தலைமை ஆசிரியை, பார்வதியை நோக்கி, 'என்ன பார்வதி, உன்னைப்போலப் பைத்தியக்காரியை நான் இந்த உலகத்தில் கண்டதில்லை. எல்லோரையும் போலவா நீ உன் மகனை வளர்த்தாய்? இரவும், பகலுமாகக் கஷ்டப்பட்டு ஆயாள் வேலை செய்து உன் ஓயாத உழைப்பினால் உன் மகனை வளர்த்து, பட்டப் படிப்பு வரை படிக்க வைத்தாய்; திருமணம் செய்து வைத்தாய். அவன் நேற்று வந்தவளின் சொல்லைக் கேட்டு, தன்னைக் கஷ்டப்பட்டுச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த தாய் என்றுகூட உன்னை நினைக்காமல் உன் கன்னத்தில் ஓங்கி அடித்துவிட்டான்; அவனுக்காகப் பரிந்துவேண்டுகிறாய். இப்படிப்பட்டவன் இருந்தா லென்ன......" என்றாள்.

'அம்மா, அப்படிச் சொல்லாதீர் பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' - என்பது உங்களுக்குத் தெரியாததா? என்றாள்.

தலைமைஆசிரியை இச்செய்திகளைத் தாளாளரிடம்தெரிவித்தார். தாளாளர் சிந்தனையில் ஆழ்ந்தார். ஆ! 'பெத்த மனம் பித்து' - இறைவன் பித்தன். தன்னை வழிபடுவோர் செய்த குற்றங்கள் அனைத்தும் பொறுத்து அருளுபவன். பித்தன் என்றும், பேயன் என்றும் தன்னைப் பாடிய சுந்தரரையும் ஆட்கொண்டானே!. சந்திரன் செய்த குற்றத்தையும், அவன்பெற்ற சாபத்தையும் பொறுத்து, அவனைத் தன் முடியில் சூடி வளரச் செய்தாரே. அதனால்தானே சுந்தரர், 'பித்தா, பிறைசூடி பெருமானே' என்று பாடினார் - சிந்தனைச் சிறகு படபடத்தது.

தாளாளர் கண்கள் நீரைச் சொரிந்தன. நீர்சொரிந்த காரணத்தை ஆசிரியை எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்! தாளாளரின் கண்ணீர் பார்வதி மகன் முருகன் உள்ளத்தில் உணர்வை ஊட்டியது. கோவிலுக்கு ஓடோடிச் சென்றான். அவன் ஸ்ரீ தாணுமாலையர் சந்நிதியில் கண்ணீரும் கம்பலையுமாக நின்ற தாயின் பாதத்தில் விழுந்து வணங்கினான். 'அம்மா, நான்செய்த குற்றத்தைப் பொறுத்து கொள்ளுங்கள்' என்றான்.

தாயின் அழுகைக் கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறியது! முகத்தில் புன்னகைப் பூ மலர்ந்தது!

ஸ்ரீ சந்திரசேகரமூர்த்தி

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தியான சுலோகம்

அபய வரத ஹஸ்தம் ஸௌம்ய ச்ருங்கார பாவம்
விபுல வதன நேத்ரம் சந்த்ர பிம்பாங்க மௌளிம் I
ருஜு தநு ஸமபாதஸ்தாநகம் வித்ருமாபம்
ஹரிண பரசு பாணிம் பத்மபீடோபரிஸ்தம்.

பொழிப்புரை : மானையும் மழுவையும் தரித்தவரும், அபய வரத ஹஸ்தம் உள்ளவரும், விரிந்த முகம் கண்கள் உள்ளவரும், இனிமையான சிருங்காரக் குறிகளை உடையவரும், பவளம் போல் மேனி உள்ளவரும், பத்மபீடத்தில் சமமாகப் பாதங்களை வைத்து நின்ற திருக்கோலத்தில் இருந்து அருளுகின்றவருமான பிறை அணிந்த பெம்மானை வணங்குகின்றேன்.

விளக்கம் :

தக்கன் தான்பெற்ற அசுவினி முதலிய இருபத்தேழு பெண்களையும் சந்திரனுக்கு மணம் முடித்துத் தந்தான். சந்திரன் தன் மனைவியருள் கார்த்திகை, உரோகிணி ஆகிய இருவரிடம் மட்டுமே மிக்க அன்பு செலுத்தி ஏனையோரைப் புறக்கணித்து வந்தான். இதனைத் தன் மகளிரால் அறிந்த தக்கன் சினந்து சந்திரன் நாளுக்கு ஒரு கலையாய்க் குறைந்து அழியக் கடவன் எனச் சாபம் கொடுத்தான். அச்சாபத்தால் தன் கலைகள் ஒவ்வொன்றாய்க் குறைந்துவருதலை அறிந்த சந்திரன் எஞ்சிய ஒரு கலையோடு சிவபெருமானைச் சரணடைந்தான். தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினன். சிவபிரான தன்னைச் சரணாக அடைந்த சந்திரனைத் தன் திருமுடி மீது தரித்து அவனைக் காத்துத் தக்கன் சாபத்தால் இழந்துவரும கலைகள் தன் வரத்தால் வளர்ந்துவர அருள்புரிந்தார். சரண் அடைந்த சந்திரனை முடிமீது தரித்துக் காத்த காரணத்தால் சந்திரசேகரர் என வழங்கப்பெற்றார்.

கர்நாடக இசையில் கமகம்

திரு. P. T. R. கமலத்தியாகராஜன்

மதுரை.

(மலர் 48, இதழ் 5, பக்கம் 245 இன் தொடர்ச்சி.)

திருமுறைகண்ட புராணத்தில் ஞானசம்பந்தர் 1600 பதிகங்களும், நாவுக்கரசர் 4900 பதிகங்களும், சுந்தரர் 3800 பதிகங்களும், பாடியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் திருமுறைகண்ட சோழன் நம்பியாண்டார் நம்பியுதவியுடன் செல்லரித்த நிலையில் சிதம்பரம் கோவிலில் எடுத்தது சம்பந்தர் பதிகங்கள் 384, நாவுக்கரசர் பதிகங்கள் 310, சுந்தரர் பதிகங்கள் 100. மற்ற பதிகங்கள் தமிழருடைய விழிப்பின்மையால் மறைந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் இதற்கு வேறுகாரணம் கூறலாம். யாழ்க் கருவி வழக்கற்றுப் போய்விட்டதால், அதன் அடிப்படையில் பதிகங்களும் மறைந்தன. தமிழ்நாட்டில் இசைபாடும் முறையானது வீணையின் அடிப்படையில் மாறிவிட்டது.

செல்லரித்த நிலையில் எடுத்த சில பதிகங்களையும், எவ்வாறு பாடுவது என்று தெரியாத நிலையில், நம்பியாண்டார் நம்பிக்கும், திருமுறைகண்ட சோழனுக்கும் உதவி செய்ய முன்வந்தது திருவெருக்கத்தம் புலியூரில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பெண். ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க முடியாத நிலையில், யாழ் வகைகளும், தேவாரப் பதிகங்களும் இருந்தனவென்பதற்கு இது மேலும் ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது. மறுபடியும் தேவாரப் பதிகங்கள் மறையாது இருக்கும்படி பல கோவில்களில் தேவாரம் பாடுவதற்கென்றே சோழ மன்னர்கள் பல நிவந்தங்களை ஏற்பாடு செய்தார்கள். இந்த முறையிலே தேவாரப் பதிகங்கள் என்றும் அழியாவண்ணம் கட்டிக் காத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் யாழ் என்னும் கருவியை, அவர்களால் காப்பாற்ற முடியவில்லை. இதனால் இசை உலகம் யாழ்க் கருவியை முற்றிலும் துறந்துவிட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஏற்றுக்கொண்டால், அந்தக்காலத்திலேயே யாழின் அடிப்படையில் அல்லாது கமகங்களுடன் கூடிய பாவபூர்வமான ஒரு இசை முறை, அதாவது வீணையின் அடிப்படையில் இன்று நாம் கர்நாடக இசை

என்று அழைக்கும் இசைமுறை இந்த நாட்டிலிருந்தது என்பதை மறுக்கமுடியாது. ஆகவே 10, 11 ஆம் நூற்றாண்டுகளிலிருந்தே இரு வேறு இசை முறைகள் தமிழ் நாட்டிலே வழக்கில் இருந்தன என்பது தெளிவாகிறது. ஒன்று யாழ் அடிப்படையில் தேவார இசை, மற்றொன்று வீணையின் அடிப்படையில் வளர்ச்சிபெற்ற ஸாஸ்திரீய இசை.

மேனாடுகளிலும் Church Music என்றும், Secular Music என்றும் இரு இசை முறைகள் இருக்கின்றன. கலைக்சண்ணோட்டத்தில் வளர்ச்சியடைந்து Orchestral Music opera, Chamber Music என்ற முறைகள், பழைய காலத்தையொட்டி எளிய முறையிலே பயிலப்படுவது Church Music. கலைக்கூடங்களில் பலதரப்பட்ட கருவிகள் ஆமந்திரிகைகளில் (Orchestras) வாசிக்கப்படுகின்றன. Church இசையில் Organ என்ற கருவியும் வாய்ப்பாட்டும் தான் கேட்கலாம்.

அண்மையில் ஓதுவார்களுப், தேவாரப் பதிகங்களை சமக பூர்வமாகப் பாடஆரம்பித்து விட்டார்கள். இந்த நிலையிலே தமிழிசை என்றால் என்ன? தேவாரயிசையென்பது என்ன? கர்நாடக இசையென்பது என்ன? என்று மக்கள் மயங்குறுகிறார்கள். கர்நாடக இசையும், தேவார இசையும் தமிழிசையின் இருவடிவங்களே. காலப்போக்கிலே கர்நாடக இசையிலே தெலுங்கு, கன்னடம், மலையாளம், வடமொழி முதலியவற்றில் கீர்த்தனைகள் பாடியது இந்த மயக்கத்தை அதிகமாக்கியுள்ளது. தேவார இசை 9 ஆம் நூற்றாண்டுத் தமிழிசையைப்பொருட்காட்சிச் சாலையில் வைத்ததற்கு ஒப்பாகும். கர்நாடக இசை அதன்பூர்ணமான பரிணாம வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. இந்த முடிவானது, மேனாட்டிசைக்கும் தமிழ் இசைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளின் ஆராய்ச்சி, நம்முடைய இசையின் வளர்ச்சியை நன்றாகப் புரிந்து கொள்ள ஏதுவாயிற்று, என்று நான் முதலில் கூறியதை வலியுறுத்துகிறது.

மேனாட்டிசைக்கும், நம்மிசைக்கும் உள்ள மற்றொரு வேறுபாடு, இருமுறைகளிலும் வாய்ப்பாட்டிற்கு அளித்திருக்கும் முக்கியத்துவம். தமிழிசையிலே சொல்லும், பொருளும், பாவமும், தாளமும் ஒன்றியிருப்பதுதான் "இசை" யெனப்படும். தமிழிலே "குரல் இல்லாதவனுக்கு விரல்" என்பதால் வாய்ப்பாட்டுதான் முதலிடம் பெறுகிறது. மேனாட்டிசையில் மிகவுயர்ந்ததாகக் கருதப்படும் "Symphonic" அல்லது 'Orchestral" இசையில் இதற்கு இடமே இல்லை. மொழி வேற்றுமை இல்லாததால் இரண்டு அமெரிக்கக் கண்டங்கள், ஐரோப்பியக் கண்டம், ருஷ்யா, ஆஸ்திரேலியா,

ஜப்பான் என்று உலகம் முழுவதும் ஒரே இசை முறை பயிலப் பெறுகிறது. நமது இசை நான்கு மாநிலங்கள் அளவில்தான் பயிலப்பெறுகின்றது.

பல நூலாசிரியர்கள் மேனாட்டிசை ஒத்திசையை (Harmony) நாடுகின்றது. இந்திய இசை இன்னிசையை (Melody) நாடுகின்றது என்றுஞ் சொல்கிறார்கள். இப்படிச்சொல்வதைக் காட்டிலும், அவர்கள் கூட்டிசையை விரும்புகிறார்கள், நாம் தனியிசையை விரும்புகிறோம் என்று சொல்வது பொருத்தமாகும். பல கருவிகள் சேர்ந்திசைப்பதால் ஒவ்வொரு கருவியும், இன்ன ஸ்ருதிக்குத்தான் செய்யவேண்டும் என்று நிச்சயத்திருக்கிறார்கள். மத்ய ஸ்தாயி சதுஸ்ருதி தெய்வதம் சரியாக 440 அதிர்வெண்ணுடையதாக இருக்கவேண்டுமென்று உலகம் தழுவிய அளவில் நிர்ணயம் செய்திருக்கிறார்கள். நம் நாட்டில் பாடுபவர்கள் எந்த ஸ்ருதியில் வேண்டுமானாலும் பாடலாம். குழல் முதலிய கருவிகளை வாசிப்பவர்கள் அவரவர் விரும்பியபடி ஸ்ருதி அமைத்துக் கொள்கிறார்கள். நம்மிசைக்குதவாத ஹார்மோனியம் நமக்குஒரேயொரு உதவியைச் செய்திருக்கிறது. அதை வைத்து ஸ்ருதி 1 கட்டை முதல் 8 கட்டை வரை நிர்ணயம் செய்கிறோம். ஆனால் இதிலும் ஒரு கட்டைக்கு குறைந்து பாடுபவர்கள், ஒரு நிர்ணயமும் இல்லாமல் 3/4 கட்டை, 1/2 கட்டை என்றுசொல்வது விந்தையாக உள்ளது. 1 கட்டைக்குக் கீழ் மறுபடியும் 7, 6 1/2, 6 என்றுதான் கூறவேண்டும். தனியிசை ஓரளவுக்கு மனோதர்மத்திற்கு இடமளிக்கிறது என்று கூறலாம்.

மேனாட்டிசையைக் காட்டிலும், கர்நாடக இசையில் தாள அமைப்பைச் சிறப்பாகச் சொல்லலாம். 7 தாளங்கள்லகுபேதத்தினால் 35 ஆகவும், கதிபேதத்தினால் 175 ஆகவும் விரிந்து நிற்கின்றன. 15 ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் பாடல்கள் இந்த 175 தாளங்களுக்கும், வேறு முறையிலமைந்த 108 தாளங்கள் சிலவற்றிற்கும் சிறந்த இலக்கியங்களாக அமைந்தன.

நாம் கீர்த்தனைகளில் காணும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற முறை மேனாட்டிலும் காணப்படுகின்றது. அவர்கள் தனிப் பாடல்களாகப் பாடுவதில்லை. ஆனால் Symphony என்ற அமைப்பில் 3 அல்லது 4 பகுதிகள் இருக்கும்.

ஒவ்வொரு பகுதியிலும் அதற்கு குறிக்கப்பட்ட மேளத்திலே முதலில் ஒரு மெட்டு இசைக்கப்படும். இந்த மெட்டை நாம் சங்கதி போடுவதற்கு ஒப்பாக Variations என்று விந்யாஸம் செய்யப் படும். இதை Thesis என்று கூறுவார்கள். பின்னர் அதே மேளத்தில் இதனினின்று வேறுபட்ட ஒரு மெட்டை இசைக்கிறார்கள். இதற்கு

Antithesis என்பர். கடைசியில் இரண்டு மெட்டுக்களையும் கலந்து இசைக்கிறார்கள். இதை **Synthesis** என்று கூறுகிறார்கள். **Thesis, Antithesis, Synthesis** என்பவை பல்லவி, அனுபல்லவி, சரணத்திற்கு ஒப்பாக நிற்கின்றன.

மேனாட்டிசையின் பொற்காலம் என்பது 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமே ஆகும். இந்தக் காலத்தில்தான், நம் சங்கீத மும்மூர்த்திகளுக்கு ஈடாக அவர்கள் கருதும் Mozart (1756-91), Beethoven (1770-1827) வாழ்ந்தார்கள். தியாகராஜர் (1767-1847), தீக்ஷிதர் (1776-1835), ஸ்யாமா ஸாஸ்திரி (1760-1827) ஆகிய மூவரும் இதே காலத்தில் வாழ்ந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது அருணாசலக்கவிராயர் (1712-1779), கோபாலகிருஷ்ண பாரதியார், ஸ்வாதி திருநாள் மஹாராஜா போன்றவரும் இதே காலத்தில் வாழ்ந்தார்கள்.

இன்னும் பலகோணங்களிலிருந்து இந்த ஒற்றுமை வேற்றுமைகளைக் காணலாம். உதாரணமாக ரசிகர்கள் கச்சேரியில் எப்படி உட்கார்ந்து கேட்கிறார்கள், என்ன எதிர்பார்க்கிறார்கள் என்று பார்க்கலாம். ஆனால் அடிப்படையான விஷயங்களை நாம் ஆராய்ந்து விட்டதால், நேரமின்மை கருதி விடைபெற்று அமர்கிறேன்.

இதய நோய்க்குத் துளசி கஷாயம்

திருவனந்தபுரம் 9—4—89. இதய நோய்களைக் கட்டுக் கடங்கியிருக்கச் செய்வதில் துளசியும் சர்க்கரை (நீரிழிவு) நோயைக் கட்டுப்படுத்துவதில் வில்வமும் நல்ல பயனளிக்கின்றன என்று டாக்டர் பி. ஜி. குருப் கூறினர். கன்னியாகுமரி மாவட்டம் மடிசாலில் உள்ள அவரது மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் அவர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

இதய நோயால் மாரடைப்பு நேரிட்டு மரணம் சம்பவிப்பது துளசி இலைக் கஷாயத்தால் குறைகிறது என்பது 5 ஆண்டுக்காலச் சோதனைகளில் உறுதியாகத் தெரியவந்துள்ளது.

வில்வ இலையும் பழமும் வயிற்றுக்கடுப்பு, வயிற்றுப்போக்கு நோய்களில் மருந்தாக ஆயுர்வேத, சித்த மருத்துவத்தில் உபயோகிக்கப்படுகின்றன. இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைக்கும் இயல்பும் அதற்கு இருக்கிறது என்பது பூர்வாங்க சோதனைகளில் தெரிய வந்துள்ளது. இது பற்றி மேலும் ஆய்வுகள் நடத்தப்படவேண்டும் என குருப் கூறினர்.

— நன்றி. தினமணி.

சைவசித்தாந்த வரலாறு

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,

(மலர் 48, இதழ் 5, பக்கம் 251 இன் தொடர்ச்சி)

சைவத் திருமுறைகள் :

வடமொழியில் அமைந்த வேதம், உபநிடதம், ஆகமம் முதலியவற்றிலும், சங்கத் தமிழ் இலக்கியங்களிலும் கருக்கொண்டு வளர்ந்து வந்த சைவம் மற்றும் சைவத் தத்துவமாகிய சித்தாந்தம் என்பன மிக விரிவாக உருவாக்கப் பெற்ற சீரிய திறத்தைச் சைவத் திருமுறைகளில் நிறைவாகக்காண முடிகிறது. சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. இவை திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் ஈருக இருபத்தேழு அருளாசிரியர்களால் அருளப் பெற்றவை. இவை கி. பி. 4ஆம் நூற்றுண்டுக்கும், 12 ஆம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழில் எழுந்த சிவதோத்திரங்களாகும். இவற்றுள் திருமந்திரம் சைவசித்தாந்த உண்மைகளைத் தெளிவு பட விளக்கும் தன்மையது. சைவத்திருமுறைகளிலேயே சைவசித்தாந்தம் உருவாக்கம் பெற்றுவிட்டதென்றும், இவற்றில் காணப்படும் தத்துவக்கோட்பாடுகளுள் ஐயங்கள் தெரிவிக்கப்பெற்ற காலத்தில், அவற்றை நீக்கித் தெளிவுறுத்தும் முறையிலேயே சைவசித்தாந்த சாத்திரங்கள் நெறிநின்று உருவாக்கப் பெற்றன என்றும் அறிஞர் கூறுவர்.

மூவர் தேவாரத்துள்ளும். திருவாசகத்துள்ளும் காணப்படும் சைவசித்தாந்தக் கூறுகள் பெரிதும் நிறைவாக சைவசித்தாந்த சாத்திர உருவாக்கத்திற்குத் துணையாவன.

" விளையாததொர் பரிசில்வரு பசுபாசவேதனை ஒண்
தளையாயின தவிரவ்வரு தலைவன் " 27 என்றும்,

" ஈருய் முதல் ஒன்ருய்இரு பெண்ணுண் குணமூன்ருய்
மாருமறை நான்காய்வரு பூதம் அவை ஐந்தாய்
ஆருர் சுவை ஏழோசையோ டெட்டுத்திசை தானய்
வேருயுட னுனிடம் வீழிம் மிழலையே " 28

என்றும் வரும் திருஞானசப்பந்தரின் அருள்வாக்குகளும்,

---

27. ஞானசம்பந்தர்தேவாரம், முதல் திருமுறை பதிகம்12 பா.3.
28. மேற்படி, பதிகம் 11 பா. 2.

" நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா " 29

முதலாக வரும் திருநாவுக்கரசரின் சரியை பற்றிய பனுவல்களும்,

" ஐவகை அரையர் அவர் ஆகி " 30

முதலாக வரும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாக்குகளும்,

" உடையாள் உந்தன் நடுவிருக்கும் " 31

என்பது முதலாக வரும் மாணிக்கவாசகர் வாசகங்களும் சைவ சித்தாந்த சாத்திரங்களாகவே கொள்ளத்தக்கன.

சைவசித்தாந்த வரலாறு ஆராய்ச்சியில் திருமந்திரத்திற்குச் சிறப்பாக ஒரு பேரிடம் உண்டு.

" சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலால்
சித்தாந்தத் தேநிற் போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்த வேதாந்தம் செப்பொரு ளாதலால்
சித்தாந்தம் வேதாந்தம் காட்டும் சிவனையே " 32

என, முற்குறித்தவாறு 'சைவசித்தாந்தம்' என்ற சொல்லை முதன் முதலாக ஆளுவதோடு வேதாந்த சிந்தாந்தத் தொடர்ச்சியையும் திருமூலர் இங்கே பதிவு செய்கிறார்.

" பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினை போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணுகிற் பசு பாசம் நில்லவே " 33

என்னும் திருவிருத்தம் முப்பொருள் உண்மைபற்றிய முதல் வடிவமாகக் கருதத்தக்கது. ஏனைய சைவத்திருமுறைகளிலும் இவ்வாறான அரிய சைவசித்தாந்த சாத்திரக் குறிப்புக்கள் பல உள்ளன. பன்னிரு திருமுறைகளையும் பன்னிரண்டு சிவஞானபோத நூற்பாக்களோடு தொடர்புபடுத்தி அறிஞர் சிலர் குறித்துள்ளனர்.

---

29. திருநாவுக்கரசர் தேவாரம், ஆறும் திருமுறை பதிகம் 31 பா. 3.

30. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் பா. 621.

31. திருவாசகம், கோயில் மூத்த திருப்பதிகம் பா. 1.

32. திருமந்திரம் பா. 2355.

33. மேற்படி, பா. 159.

சித்தாந்த முதல் நூல்கள் :

மெய்கண்ட சாத்திரங்களுள் முற்பட்டதாகக் கருதப்படுவன திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும். இவற்றிற்கு முற்பட்டதாகக் கருதப்படும் சைவசித்தாந்த சாத்திரநூல் ஞானாமிர்தம். இதன் ஆசிரியர் வாகீசமுனிவர். 75 அகவற்பாக்களால் ஆனது. சம்மியஞானம், சம்மியதரிசனம், பாசபந்தம், தேகாந்தரம், பாச அநித்துவம், பாசச்சேதம், பதிநிச்சயம், பாசமோசனம் என்னும் எட்டுஇயல்களாக இந்நூல் பகுக்கப்பட்டுள்ளது. இந்நூலின் காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர். வாகீசமுனிவர் கோளகிமடம் என்று அக்காலத்தில் விளங்கியிருந்த சைவசித்தாந்த மடத்தைச் சார்ந்தவர். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்காக எண்ணப்பட்டகாலை ஞானாமிர்தம் சேர்க்கப்படாமைக்கு உரிய காரணம் விளங்கவில்லை.

சைவசித்தாந்த சாத்திரங்களை உபதேச முறை என்றும், ஆராய்ச்சிமுறை என்றும் பகுத்தல் உண்டு. சிவஞானபோதத்திற்கு முற்பட்ட திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும் உபதேச முறையில் ஞானத்தை விளக்குவன. திருவுந்தியாரின் ஆசிரியர் திருவியலூர் உய்யவந்த தேவர். நூலின் காலம் கி. பி. 1148. இந்நூல் 45 பாடல்களால் இயன்றது. சைவசித்தாந்தக் கூறுபாடுகளுள் சிலவற்றை மட்டும் அனுபவ வாயிலாக விளக்கி இந்நூல் நிறைகிறது. பல பாடல்கள் பொருள் காண்டற்கு அருமையுடையன. திருவியலூர் உய்யவந்தாரின் மாணாக்கரின் மாணாக்கராகிய திருக்கடவூர் உய்யவந்ததேவர் திருவுந்தியாருக்கு விளக்கமாக நூறு வெண்பாக்களால் இயற்றிய பிறிதோர் நூலே முற்குறித்த திருக்களிற்றுப்படியார் என்பது. இதுவும் அனுபவ விளக்கமாகவே அமைந்தது. இந்நூல் இயற்றப்பெற்ற காலம் கி. பி. 1177 ஆகும்.

மெய்கண்டார் :

'சைவசித்தாந்த சாத்திர நூல்களுள் தலைமணியாக விளங்குவது மெய்கண்டார் அருளிச்செய்த சிவஞானபோதமே. சித்தாந்த உண்மைகள் பழமையானவையே என்றாலும் அவற்றைத் தெளிவாக எடுத்து விளக்கியவர் மெய்கண்டதேவரே. 34 ஏனைய சாத்திர நூல்கள் சைவசமயக் கொள்கைகளுக்கு விளக்கம் தருவனவாயினும்

34. தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருவருட் செல்வி, முதல்பகுதி ப. 60.

சிவஞானபோதமும் சிவஞான சித்தியுமே எல்லாவகையான ஐயங்களையும் நீக்கி முழுவிளக்கத்தைத் தருவன. 35 சிவஞானபோதம் தருக்க நெறி நின்று, மூவகை அளவைகளால் முப்பொருள் இயல்பைப் பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன் என்னும் நான்கு இயல்களுள், பன்னிரண்டு நூற்பாக்களால் விளக்குவது. பேரறிவுடையோர் மட்டுமே அணுகத்தக்க செறிவுடையது. உரை நடைப் பகுதியில் அமைந்த மேற்கோள், ஏதுக்கள் முதலியவற்றோடு 81 வெண்பாக்களையும் கொண்டு விளங்குவது. சிவஞானபோதத்திற்குப் பின் இன்றளவும் தோன்றிய எல்லாச் சைவசித்தாந்த நூல்களும் சிவஞானபோதத்தை ஏதேனும் ஒருவகையில் விளங்குவனவாகவே தோன்றின.

சிவஞான போதத்தில் காணப்படும் பன்னிரண்டு நூற்பாக்களும் ரௌரவ ஆகமத்தில் உள்ள பன்னிரண்டு நூற்பாக்களின் மொழி பெயர்ப்பென்று டாக்டர் ரமண சாஸ்திரி முதலிய அறிஞர்கள் குறித்தனர்36 மறைமலை அடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை, 37 மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார் 38 முதலிய அறிஞர்கள் மெய்கண்டாரின் சிவஞானபோதம் தமிழில் எழுந்த முதல் நூலே எனக் கருதுகின்றனர். எம். பாலசுப்பிரமணிய முதலியார் 120காரணங்கள் காட்டி, இந்நூல் முதல்நூலே என்பதை 1949இல் சிறு நூல் ஒன்று எழுதி நிறுவினர். சிவஞானபோதத்தின் தோற்றத்திற்கு முற்பட்ட சைவசமய வரலாற்றையும், இலக்கியங்களையும் உற்று நோக்குவார்க்கு சிவஞானபோதம் முதல்நூலே என்பது நன்கு புலப்படும். மெய்கண்டாரின் காலம் கி. பி. 1232ஐ ஒட்டிய காலப்பகுதி என்பர்.

அருணந்தி சிவம் :

அருணந்தி சிவாசாரியர் மெய்கண்டாரின் தலை மாணக்கர். சிவஞான போதப் பன்னிரண்டுநூற்பாக்களுக்கும் செய்யுள்நடையில் அமைந்த விரிவுரையாக இவர் சிவஞான சித்தியார் சுபக்கத்தை இயற்றினர்.

"சிவனுக்குமேல் தெய்வம் இல்லை சித்திக்கு விஞ்சிநூல் இல்லை"

---

35. தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் செந்தமிழ்ப் பூம்பொழில் மூன்றும் தொகுதி ப. 177.

36. COLOS, 2 Part I, P. 531.

37. S. C. PP. 45-73: M. S. PP. 11-27.

38. சித்தாந்தத் தெளிவியல் ப. 28.

என்று இதன்சிறப்பைக்கூறுவர். 'தண்டமிழின்மேலாம் தரம்' என்று நிறைவுறுசெய்யுள் சிவஞானசித்தியாரை இணைத்துப்பேசுகிறது. தருமை ஆதீனக் குருமுதல்வர்,

"பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதி போதும்[39]"

எனச் சிறப்பிப்பர். சைவசித்தாந்தத்தின் முழுமையைச் சித்தியாரில் தான் காண இயலும். புறச்சமயக் கண்டனமாக இவர் இயற்றியது பரபக்கம் எனப்படும். சித்தியார் மட்டுமின்றி இருபா இருபஃது என்னும் நூலும் இவரால் இயற்றப்பட்டது.

உமாபதிசிவம் :

அருணந்திசிவத்தின் மாணாக்கர் மறைஞானசம்பந்தர். அவர் மாணவர் உமாபதிசிவர். சிவஞானபோதத்தின் சார்பு நூலாகக் கருதத்தக்க சிவப்பிரகாசம் இவரால் இயற்றப்பட்டது. இதுவன்றித் திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, சங்கற்ப நிராகரணம் என்பனவும் இவரால் இயற்றப் பெற்றுள்ளன. மெய்கண்டாரின் மாணவருள் ஒருவரான திருவதிகை மனவாசகங்கடந்தார் என்பவரால் உண்மை விளக்கம் என்ற சிறு நூல் ஒன்றும் இயற்றப்பெற்றுள்ளது. தத்துவங்கள், பஞ்சாட்சரம், நடராச தத்துவம் முதலியவற்றை இந்நூல் விளக்கு கின்றது. திருவுந்தியார் முதல் சங்கற்பநிராகரணம் ஈறாக அமைந்த இப்பதினான்கு நூல்களையும் மெய்கண்ட சாத்திரங்கள் என்பர். உமாபதி சிவாசாரியரின் காலம் கி. பி. 1313ஐ ஒட்டிய காலப்பகுதி என்பர்.

உமாபதிசிவத்திற்குப் பின்னும் சைவசித்தாந்தச்செந்நெறியை விளக்கி அறிஞர் பலர் நூல்கள் இயற்றினர். சித்தாந்த சாத்திரங் களுக்கு உரைகள் காணப்பட்டன. சைவசித்தாந்தத்தைப் பேணி வளர்க்கும் சைவத்திருமடங்கள் சில தோன்றின. இத்திருமடங் களின் தலைமை பூண்டோரும், திருக்கூட்டத்தவரும் பல அரிய சாத்திரச் சிறுநூல்களை அளித்தனர். இவை ஞானம், யோகம், கண்டனம் எனப் பலவாறாக அமைந்தன.

சைவசித்தாந்த வரலாற்றைக் கி. மு. 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகிய வேதகாலத்திலிருந்தே தொடங்குதல் பொருத்த மாகிறது. வேத, வேதாந்த, ஆகமங்களாகிய வடமொழி நூல்களில் ஒருபுறமாகவும், தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருமுறை ஆகிய நூல்களில் ஒருபுறமாகத் தமிழிலும் சைவசித்தாந்தச் செந் நெறி வளர்ந்தமைந்தமையும், மெய்கண்டார் காலத்தில் இந்நெறி அறிவாராய்ச்சி நெறியில் வடிவமைக்கப் பெற்றமையும், மெய்கண்டாருக்குப் பின்னும் இந்நெறி மேலும் ஒளி பூத்துச் சிறந்தமையும் இக்கட்டுரையில் ஒருவாறு விளக்கப்பெற்றன.

---

39. சிவபோகசாரம் பா. 30.

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,

தருமபுரம்.

(மலர் 48, இதழ் 5, பக்கம் 257 இன் தொடர்ச்சி.)

நமக்கு வேண்டியவர்களை நினைப்பூட்டும் சின்னங்களை அழிக்க நமக்கு மனம் இயற்கையில் வராது. செய்தக்க அல்ல செய்வதால் கேடுவருவதுபோல - செய்தக்க செய்யாமையானும் கேடுவருந் தானே! கண்ணோட்டம் இந்த வகையில் குறைபாடுடையதுதான்.

உழவர்செயல் உவப்பாயில்லை; உழவர்கள் களை பறிக்க முந்தியபோது காதலியர் கண்களையொத்த குவளைகளையும் முக மொத்த தாமரைகளையும் வெட்டியெறியத் தயங்கினார்கள் - என்கிறது சிந்தாமணி.

கண்ணெக் குவளையுங் கட்ட லோப்பினர்
வண்ணவாண் முகமென மரையி னுள்புகார்
தண்வய லுழவர்கள் தன்மை யின்னதே. (சிந். 51)

கம்பர் - இதே காட்சியை இப்படியே வருணிக்க வந்து கடைசியில் தம்கருத்தையும் இணைத்துக் கூறினார். இடித்துரை அங்கே ஆசிரியர் கூற்றில் அமைந்து செய்தக்க செய்தார் - என்று நம்மைப் பாராட்ட வைக்கிறது.

பண்கள்வாய் மிழற்றும் இன்சொல் கடைசியர் பரந்து நீண்ட
கண், கை, கால், முகம், வாய் ஒக்குங்களை அலால்களையிலாமை,
உண்கள்வார் கடைவாய் மள்ளர், களைகலாது உலாவி நிற்பர்
பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ, சிறியோர்
[பெற்றுல். (கம். 41)

நெற்குன்றம் :

மருதநிலத்தில் அறுவடைக்குப் பின் நெல்குப்பை பொன் குன்றமென நிற்கின்றது. எருமைப் போத்துக்களை விட்டு மிதிக்கச் செய்து, வை - நெல் இவற்றைப் பிரித்தனர் உழவர்.

ஈடுசால் போர்பழித்து எருமைப் போத்தினால்
மாடுறத் தெழித்துவை களைந்து காலுறீ இச்
சேடுறக் கூப்பிய செந்நெற் குப்பைகள்
கோடுயர் கொழும் பொனின் குன்றமொத்தவே. (சிந். 59)

கம்பர் வாக்கில் இதே காட்சி சுருக்க விளக்கமாக அமைகிறது.

குறிகளும் போத்தின் கொல்வார்
கொன்றநெல் குவைகள் செய்வார். (கம். 51)

சச்சந்தன் இயல்பு :

அரசன் பகை நட்பென்ற இருபாலரையும் சந்திக்க வேண்டியவன். பகைவர் அஞ்சும்படியாக, நண்பர்கள் கொஞ்சும் படியாக அவன்பழகிடவேண்டும். அத்தகையவனே சிறந்த அரசனுமாவான். சச்சந்தன் பகைவர்களுக்கு விடமாக, அடைந்தோர்க்கு அமுதமாக இருந்தான் என்றுர் தேவர்.

நச்சு நாகத்தி ஞாழற் சீற்றத்தன்
அச்ச முற்றடைந் தோர்க்கமிர் தன்னவன் (சிந். 15)

கம்பர் – பார்வை இதே செய்தியில் பயன் காட்டும் முகமாக அமைகிறது. விடத்தால் நோயும் அமுதத்தால் தெளிவும் கிடைக்குமன்றே. தசரதன் சிலருக்கு நோயாக - சிலருக்கு மருந்தாக இருககிறுன்.

நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும். (கம். 171)

பண்பியாக இருந்த செய்தி - பண்பாக மாறினும் சுவை மாறவில்லை.

காமக் கையறவு :

காமம் மிகுப்போது அறிவு ஒளி குன்றிப்போகும். இதனைப் பலரும் கூறியிருந்தாலும் – சச்சந்தன் விஷயத்தில் அவன் அறிவே அவனை இடித்துரைப்பதாகச் சிந்தாமணி காட்டியது.

கோதியல் காமமென்னும் மதுவினிற் குளித்த ஞான்றே
ஓதிய பொறியற்ருய் - (சிந். 233)

கம்பர் இதனை ஞானமே காமக் கடல் கடக்கும் புணையாக உதவும் என்று காட்டுகிறுர்.

கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக்
கடக்கல் ஆமோ (கம். 3150)

காமத்தைத் தீ என்றது சிந்தாமணி
கட்டழற் காமத்தீயிற் கன்னியைக் கலக்கினுன். (சிந். 253)

கம்பரும் "காமத்தால் கனலும் வெந்தீ" (கம். 3150)

என அதனை அப்படியே ஏற்றுக்கொண்டார்.

காமத்தை 'மது' என்றது சிந்தாமணி.
"காமமென்னும் மது" (சிந். 233)

கம்பரும் "காமப்புதுமணமதுவின்தேறல்"(கம். 470) எனஅப்படியே கூறினர்.

தாய்மைக் கனிவு :

சேயை நினைந்தபோது சோரும் பால்பெருக்கு - தாய்மைக்குச் சிறந்த அடையாளம். திருத்தக்க தேவர் மருதநிலக் கால்நடைச் செல்வத்தில் இச்செழுமையை வைத்துக் காட்டுகிறார்.

நிறைகள் கன்றை நினைந்து பொழியும் பாலின் ஒலி கடலோசை போல இருந்தது.

"மொய்ந்நிரை - புல்லுகன்றுள்ளிப் பொழிந்து பால்படும் - கல்லென் கம்மை ஓர் கடலின் மிக்கதே" (சிந். 413) கம்பரின் கற்பனை இன்னும் சிறிது அதிகமாக விரிந்தது.

எவ்வுயிரும் காக்க ஒரு ஈசனுண்டோ இல்லையோ என்று யாரும் ஐயப்படவேண்டாம். பாலுக்காக ஏங்கும் அன்னக் குஞ்சுகளின் வாயிலேயே பால் பொழியப்பட்டது. அந்தச் செயலைச் செய்தவை வள்ளல் எருமைகள் தாம்.

தாய் அன்னங்கள் வரப்புகளில் ஒய்யாரமாக நடைபயிலக் குஞ்சுகள் தாமரைப் படுக்கைகளில் பசியோடு ஒலியெழுப்பின. நடுக் குளத்தில் மேய்ந்து கொண்டிருந்த எருமைகள் வயிறு நிரம்பிய நிலையிலும் சேற்றில் கால்கள் அழுந்திய நிலையிலும் கரையேற மாட்டாமல் சோர்வுபட்ட நேரம், கன்றுகளை நினைந்தனவாம். பால் சோர்ந்து - அன்னக் குஞ்சுகள் வாயிலேயே சேர்ந்து – பசியைப் போக்கியது. கம்பரின் கற்பனைக்குக் கால்கோள் செய்தது சிந்தாமணிதானே!

சேலுண்ட ஒண்கணாரின் திரிகின்ற செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி கன்றுள்ளிக் கனைப்பச்சோர்ந்த
பாலுண்டுதுயில, பச்சைத் தேரைதா லாட்டும்பண்ணை (கம் 44)

(வளரும்)

'தேவர்' சொற்பொருள் விளக்கம்

வித்துவான் திரு. தா. குருசாமி
மதுரை.

சுக்கில ஆண்டு சித்திரைத் திங்கள் ஆயில்ய நாளில் மதுரையி லிருந்து புதியராகவந்திருந்த மின்சாரவாரிய அலுவலர் சின்னராசு என்பவருடன் ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்களை வழிபடும் பேறு பெற்றேம். உடன் வந்தவரை அறிமுகம் செய்துவைத்து வணங்கினேன். அவர் குருவடிபோற்றித் திருநீறு பெற்றவுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் - 'நீர் முத்துராமலிங்கத் தேவர் இனத்தவர் தானே' - எனத் திருவாய் மலர்ந்தருளக் கேட்டு ஆச்சரிய முற்றூர்; கூருமலே குறிப்பறிந்த குருமணிகளிடம் 'ஆம்' என விடை கூறியவுடன், 'தேவர்' என்ற பெயர் எப்படி வந்தது எனத் தமக்கே உரிய ஆய்வுணர்வுடன் கேட்டு அவர்களே விளக்கமும் அருளினூர்கள்.

"பலர், நோற்று வீர சுவர்க்கம் அடைவர்; ஆனல் தேவர் இனத்தவரோ போரில் மறச்செயல் மூலமாகப் போரிட்டு வீர சுவர்க்கம் அடைவர்; ஆதலால் பூவுலகில் இவர்கட்குத் 'தேவர்' என்ற பெயர் வந்தது. பெரும்பாலும் தேவர் இனத்தவரே முடிமன்னராகவும், குறுநிலமன்னராகவும் இருந்துள்ளனர். சோழ பாண்டியர் பெயர்களும் கல்வெட்டுகளில் 'தேவர்' என்ற பட்டத்தோடு காணப்படுகின்றன. இராஜராஜதேவன், அருண் மொழித்தேவன் முதலிய பெயர்கள் இதற்குச் சான்று. புதுக் கோட்டைத் தொண்டமான், மலையமான் திருமுடிக்காரி, இராமநாத புரம் அரசர்களும் இவ்வினத்தவரே.

கள்ளர், மறவர், அகம்படியர், வன்னியர் முதலியவர் தேவர் இனத்தவரே. வஞ்சகம் இன்றிப் போர் செய்பவர் கள்ளர்; முனைமுகத்தில் அஞ்சாது வீரம் காட்டுபவர் மறவர்; அரசனின் உள் அந்தரங்கப்படை-மெய்க்காப்பாளர்-அகம்படியர்; வன்னியர்-நெருப்புப் போன்ற தமது சினத்தால் எதிரிகளை அழிப்பவர். படையை ஆட்சி நடத்துவதால் படையாட்சி என்றும், 'தேவர்' இன உள்ளினச் சாதியை விளக்கும்.

போர்க்களத்தில் உயிர் கொடுப்பவர் வீர சுவர்க்கம் புகுவர் என்ற வீரப் பண்பினுல் - இவர்களும் 'பூசுரர்' போல, 'பூதேவர்'

எனப்படுவர் 'தேவர்' இனத்தவரே. மற்ற இனத்தவரும் முனை முகத்துச் சென்று புகழ் பெற்றுள்ளனர்.

வேளாளர்களில் அச்சுதக் களப்பாளர், தளவாய் அரியநாதர் போன்றவரும் - வீரத்தால் அரசுற்றவர் சிறுபான்மை உண்டு. கலிப்பகையாரும் வேளாளரே. சிறுத்தொண்டராகிய பரஞ்சோதியார், முனையடுவார்நாயனார், கூற்றுவநாயனார் முதலியவர்களும் க்ஷத்திரியர் போற் சிறந்தவர்கள. அந்தணர்களில் பிற்காலத்தில் இராமப்பையன் போன்றவர்கள் தேவர் போல் வீரப்போர் புரிந்து புகழ்பெற்றிருக்கின்றனர். நாயகர் என்ற பெயரும் வீரத்தால் வந்ததே.

மன்னரின் பேரில் சிறப்புடன் போரிட்டுப் பரிசு பெற்றதைக் கொண்டு முதன்முதலில் மாடிவீடு போன்று மேட்டிடத்தில் வளமனை கட்டிவாழ்ந்ததால் மேடை தளவாய் குமாரசாமி முதலியார் எனப் பெயர் பெற்றுள்ளார். நால்வகை வருணத்தவரில் க்ஷத்திரியரில் ஒருபகுதியினரே 'தேவர்' என்பவர். கண்ணிமையாது எதிரியோடு போரிட்டு வீரசுவர்க்கமடைவார் என்பது அதன் பொருள். தேவர் குலத்தவர் நாட்டிற்கும் சமய ஒழுக்கத்திற்கும் இழுக்கு ஏற்பட்டால் அதனை நீக்க உயிரும் கொடுப்பர்.

மதுரைக்கோயிலில் சுல்தான்படை உள்ளேநுழைந்து அழிபாடு செய்ய வந்தபோது கோயில் மெய்காவல் சதாசிவன் சேர்வை கீழராஜ கோபுரத்தில் ஏறி உச்சியிலிருந்து குதித்து உயிர் விட்டுப் படை உள்ளே நுழையாதபடி செய்து காத்தார். இத்தகு தியாகப் பரம்பரைதேவர் இனம். மதுரைக் கோயில் கல்வெட்டு இதனைக் கூறும். மதுரைத்தமிழ்ச் சங்கப் பொன் விழாவின் போது, திருஞான சம்பந்தர் ஞானப்பால் அருந்தியதைக் குறைவுபடுத்திப் பேசியதை, அனைவரும் கேட்டுவாளா இருந்தபோது, முத்துராமலிங்கத் தேவர் கிளர்ந்து எழுந்து ஆரவாரித்து மேடையில் அறைகூவல் விட்டார். சமய ஒழுக்கம் காத்த பரம்பரையினர் 'தேவர்' பரம்பரையினர் – என்று செந்தமிழ்ப் பரமாசாரிய மூர்த்திகளின் அருளிப்பாட்டைப் பெற்று மகிழ்ச்சியடைந்தோம்.

கட்டுரை எண். 16.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞான போதத்தில் கூறியுள்ள சுருக்கமான கருத்துகளை, சிவஞான சித்தியாரின் ஆசிரியர் விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளமை முன்பிருந்தே சிந்திக்கப் பெற்று வருகிறது. அவ்வகையில் முதற்சூத்திரத்தில் கூறப்பெறும் பதியுண்மைக் கருத்துகள் தொடர்ந்து சித்தியாரிலிருந்து ஈண்டு எண்ணுவது இயை புடையது ஆகிறது.

இருவரும் அழிவரா?

முத்தொழில்களையும் செய்யும் உரிமை அரனுக்கே உரியது எனக் கூறிய கருத்தினைத் தொடர்ந்து மேலும் விளக்கம் தருகிறார் ஆசிரியர். சங்கார காலத்தில் சிவபெருமான் ஒருவர் மட்டுமல்லாது மற்றைய அயனும் அரியும் ஒடுங்காது தத்தம் ஆற்றலோடு நிலை பெறுவர் என்று கூறலாமா? என்னும் கேள்வியை எழுப்பிக்கொண்டு விடை தருகிறார். அவர்கள் இருவரும் ஒடுங்காது இருப்பின் அது சங்காரமாகாது; எனவே அவர்களும் ஒடுங்குவர் என்பது கருத்து. அங்ஙனம் அவர்கள் ஒடுங்குவார்களாயின், பின் உலகம் தோன்று தற்கும் நிலைபெறுதற்கும் வழியில்லையே என்னும் கேள்வி எழுகிறது. ஒடுக்கிய சங்காரகடவுளே ஆதாரமாய் நின்று பின்னும் உலகத்தைத் தோற்றுவித்து நிலைபெறச் செய்வர் என்பது அவ்வினாவிற்குரிய விடையாகும். இக்கருத்துகளை விளக்கும் பாடல்:

"இறுதியான காலந் தன்னில் ஒருவனே; இருவரும்தம்
உறுதியில் நின்றார் என்னில் இறுதிதான் உண்டாகாதாம்;
அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் அவனால் இன்னும்
பெறுதும் நாம் ஆக்கம் நோக்கம் பேர் அதிகரணத்தாலே"

முத்தொழிலும் ஏன்?

இறைவன் இங்ஙனம் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் செய்தற்குக் காரணமென்ன? என்னும் வினாவிற்கு அடுத்து விடை தருகிறார். இங்ஙனம் செய்தல்

இறைவனுக்கு ஒரு விளையாட்டு என்று சொல்லுதலோடு, உயிர்களின் கன்மத்திற்கு ஏற்ப, போக முத்திகளைக்கொடுத்தற்கு என்றும் அநாதியே அவ்வுயிர்களைப் பொருந்திய மலத்தை நீக்குதற்கு என்றும் விடை கூறுகிறார் ஆசிரியர்,

"சொன்ன இத்தொழில்கள் என்ன காரணம் தோற்ற என்னில்
முன்னவன் விளையாட்டு என்று மொழிதலுமாம்; உயிர்க்கு
மன்னிய புத்தி முத்தி வழங்கவும் அருளால் முன்னே
துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதும் சொல்லலாமே."

என்பது அக்கருத்தமைந்த பாடலாகும்.

ஐந்தொழில்களும் அறத்தொழில்களா?

இறைவன் உயிர்களுக்குச் செய்யும் ஐந்தொழில்களையும் பற்றிய ஒரு வினாவை அடுத்து எழுப்பிக் கொள்கிறார். மேலே முத்தொழில்கள் என்று சொல்லியனவே ஐந்தொழில்களாக விரிகின்றன. மறைத்தல் தொழில் காத்தலிலும் அருளல் தொழில் சங்காரத்திலும் அடங்கும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களில் அருளலைத் தவிர எஞ்சிய நான்கும் துன்பம் கொடுப்பன ஆதலால் அவை அறத்தொழில்களாக எங்ஙனம் ஆகும் என்பதே அவ்வினா. மலபரிபாகம் பெறச் செய்ய படைத்தலும், கன்மத்தை நுகர்வித்துக் கழிப்பிக்கக் காத்தலும், இளைப்பாற அழித்தலும், இருவினையொப்பு வருவிக்க மறைத்தலும் இறைவன் செய்கிறார் ஆதலின் அவையும் அறத்தொழில்களே ஆகும் என்பது அதன் விடை. இக்கருத்துகளை,

"அழிப்பு இளைப்பு ஆற்றல் ஆக்கம் அவ்வவர்க் கன்மமெல்லாம்
கழித்திடல் நுகரச் செய்கை காப்பது கன்ம ஒப்பில்
தெழித்திடல மலங்களெலாம் மறைப்பு அருட்செய்தி தானும்
பழிப்பு ஒழி பந்தம் வீடு பார்த்திடின் அருளேஎல்லாம்"

என்னும் பாடல் விளக்குகிறது.

மூவேறு வடிவம் :

அடுத்து ஆசிரியர் முதல்வனது தடத்த வடிவம் பற்றிய கருத்துகளைக் கூறுகின்றார். இறைவன் அருவமும் உருவமும் அருவுருவமும் என்னும்மூன்றுவடிவங்களையும்கொண்டவன் என்றும் அவையே இறைவனின் தடத்தவடிவங்களாம் என்றும்கூறுகின்றார்.

" அருவமோ உருவாருப மானதோ அன்றி நின்ற
உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவு எனக்கு உணர்த்து இங்கு
அருவமும் உருவாருபமானதும் அன்றிநின்ற [எனின்
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்கு உள்ளவாமே "

என்னும் பாடலில் அக்கருத்து விளக்கப்படுகிறது.

நினைவில் நிலைக்கும் உருவம் :

முதல்வனுக்கு உருவம் உண்டு என்னில் அவ்வுருவத்தை உண்டாக்க வேறொரு கடவுள் வேண்டுமோ? எனில் வேண்டாது; தான் நினைந்த உருவத்தை அவனே கொள்வன. அங்ஙனம் என்னில் நம்மனோரும் அப்படியே கொள்ள முடியுமோ எனில், கொள்ள முடியாது. இறைவன் யோகசித்தரைப் போல நினைந்த உருவத்தை எடுத்துக் கொள்ளும் ஆற்றல் உடையன் என்கிறார் ஆசிரியர்.

' நண்ணிடும் உருவம் என்னில் நமக்குள உருவம் போலப்
பண்ணிட ஒருவன வேண்டும்; இச்சையேல் பலரும் இச்சை
கண்ணிய உருவம் கொள்ளேம் யாம்; பெறும் கடவுள் தானும்
எண்ணிய யோக சித்தர் போல் உருஇசைப்பன் தானே "

என்பது அப்பொருளுடைய பாடல். (தொடரும்)

திருக்கோயில் கண்டேன்

அமரர் கி. வா. ஜ. வும் நானும் தருமை ஆதீனத்தைச் சார்ந்த திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்திற்கு 14-2-60 அன்று சென்றிருந்தோம். "சப்தஸ்தான" விழாவைப் பற்றிய கட்டுரை எழுதப் படம் பிடிக்கச் சென்றிருந்தேன். அப்பொழுது கோவிலில் உள்ள பார்வையாளர் புத்தகத்தில் ஒரு பாடல் எழுதினார் கி. வா. ஜ. அப்பாடல் வருமாறு :-

" அறம்வளர்க்கும் திருத்தாயைப் பங்கிற் கொண்ட
ஐயாறன் செய்யபொற் சோதி, பத்தித்
திறம்வளர்க்கும் அப்பமுனி கண்ணிற் காணத்
திருக்கயிலை காட்சியினைக் காட்டும் பெம்மான்
மறம்வளர்க்கும் திரிபுரத்தை மாய்த்த தேவன்
வாழ்கின்ற திருக்கோயில் கண்டேன் தொண்டின்
அறம்வளர்க்கும் பணியாளர் அன்பு கண்டேன்
நீடுழி வாழ்கவென்று வாழ்த்தி னேனே. "

(இப்பாடல் கலைமகள், ஏப்ரல் 1989 இதழில் வெளிவந்தது.)

— திரு. என். இராமகிருஷ்ணு, மயிலாடுதுறை.

கூற்றுவ நாயனார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 2—4—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

முதல் ஞாயிறு அறிவுப் பசிக்கு விருந்து! அது உலகியல் நெறியையும் சமயநெறியையும் கலந்து உவந்து ஊட்டும் நல்விருந்து! இயற்கை எழிலும் திருக்கோயில் பொலிவழகும் மிக்க தருமையில் இந்த விருந் கிடைக்கிறது. காலை 9-50 க்குத் தருமைத் திருமடம் சார்ந்தேன்.

கண்ணுக்கு இனிய பெருளாகிய ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு நடந்து கொண்டிருந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் தீபாராதனை நிகழ்த்தினார்கள். பக்தர்கள் பரவசமானார்கள். ஸ்ரீ சொக்கநாதர் வழிபாட்டில் தீபாராதனை அழகே அழகு! வழிபாடு நிறைந்தது. குருமணிகள் பண்டாரக்கட்டிற்குச் சென்றார்கள். பாராயணம் ஆயிற்று. அருளுபதேசக் கூட்டம் வழக்கம் போல் அன்பர்கள் நீறுபெற்று அணிந்தபின், திருமுறை இசையுடன் தொடங்கிற்று. அடுத்து, குருமணிகள் அருளுபதேசம் வழங்கினார்கள்.

முதலில் மாதச் சிறப்புநாள்கள் பற்றியும் அவற்றின் தத்துவங்கள் பற்றியும் அருளிச் செய்தார்கள். திருமுறைப் பண்ணிசை நிகழ்ந்தபோது மதுரையிலிருந்து வந்திருந்த தருமை ஆதீன அன்பர் திரு. எஸ். செல்வநாயகம் அவர்களின் துணைவியார், "பனைக்கை மும்மத வேழம் உரித்தவன், நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" என்று தொடங்கும் திருநாவுக்கரசர் தேவாரத்தைப் பாடினார்கள். இதனைத் திருவுளத்துக் கொண்ட குருமூர்த்திகள் 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்'. என்றதொடரைச் சாத்திர தோத்திரநெறியோடு இனிய விளக்கம் அருளி அன்பர்களை நன்னெறிப்படுத்தி உய்வித்தார்கள்.

"இறைவன் அடியவர் மனத்தில் எழுந்தருள்வான்; அவனை மனத்தில் எழுந்தருளச் செய்வது என்பது எளிதில் அமைந்து விடாது. ஞானசம்பந்தர்,

" அகன் அமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று
ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்து
உள்இருக்கும் புராணர்கோயில் "

என்று விழிமிழலைப் பெருமானைப் பாடுமுகமாக இக்கருத்தை விளக்கியருள்கிறார் அகத்தில் அமர்ந்த அ ்புப், ஞானமும் எய்தப் பெற்றோர் மனத்தாமரையில் இறைவன் எழுந்தருள்வன். ஆனால் ஒருநிபந்தனை! காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம் என்னும் ஆறு பகைகளையும் அழித்துவிடவேண்டும்! உள்ளம் சுத்தமாக இருக்கவேண்டும்" குருமணிகள் மேலும் விளக்கினார்கள். "இத்தகைய, உள்ளத்தின் செயலால் விளைபயன் இறைவன் திருவீற்றிருக்கை. ஆம்! 'துறந்தோர் உள்ளப்பெரும் பயன்' அல்லனோ அவன்! குமரகுருபர முனிவர்

" அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும்
தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே "

என்றார். அகந்தைக் கிழங்கை வேர்விடாதபடி நன்றாக் கல்வி எறிந்துவிடவேண்டும்; அப்போதுதான் இறைவன் உளக்கோயிலில் தங்கிநிற்பான்! விளக்காக மிளிர்வான் அவன்!

உருகி உருகிக் கண்கள் நீர்ஒழுகி
துதிநாத் தழும்பேறும் ஒப்பில் தவத்தர்
உளக்கோயிற்கு ஏற்றும் ஞான மணிவிளக்கே!

என்றார் குமாரதேவர். உருகுதல், கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஒழுகுதல், துதிக்கும் நாப்பலகாலும் இறைநாமம் செப்பித் தழும்பு ஏறல் முதலிய மெய்ப்பாடுகளும் அநுபவமும் கொண்ட ஒப்பற்ற தவத்தோர் உளக்கோயிலில் இறைவன் ஞான மணி விளக்காக விளங்குகின்றான்; சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றான்! ஞான ஒளி தருகின்றான்; அம்மட்டோ! " உருகா மனமும் சிவஞானம் உணரா உளமும் பயனற்றவை " என்று விரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ் கூறுகிறது.

இங்ஙனம் மனக்கோயிலில் இறைவன் எழுந்தருள எப்படி எல்லாம் நம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதைக் குருமணிகள் விளக்கியபோது நாமும் முயல்வோமே என்றது மனம்! பாசிபடுகுட்டமாக அல்லவா இந்த மனம் பரிதவிக்கிறது! குருவருள்தான் துணைநிற்க வேண்டும்!

திருமுறை விளக்கம் அருளிய குருமணிகள் தொடர்ந்து கணநாதர் புராணத்தை மீண்டும் சுருக்கமாக அருளிக் கூற்றுவ நாயனுர் புராணத்தைத் தொடர்ந்தார்கள்.

கூற்றுவன் என்ற சொல் இயமனைக் குறிப்பது. இச்சொல் காரணப் பெயர். கூறு + அன் = கூற்றுவன். உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவன் கூற்றுவன் எனப் பொருள் விளக்கம் அருளிப் புராணப் பகுதிக்கு நம்மை இட்டுச் சென்றூர்கள். "ஆர்கொண்ட வேல்கூற்றன் களந்தைக்கோன்'' என்று சுந்தரர் கூற்றுவ நாயனுரைக் குறித்தார். கூற்றுவநாயனுர் 'களந்தைக்கோன், என்ற சொல்லால் குறிக்கப்பெற்றூர். இத்தகு ஆட்சிக்குக் காழியர்கோன், நாவலர்கோன் என்பனபோன்ற வழக்காறுகளைச் சான்றாகக் காட்டியமை மிகப் பொருத்தமாக இருந்தது. சேக்கிழார், களந்தைக்கோன் என்பதைக் 'களந்தை முதல்வனுர்' என விளக்கம் தந்து ஆள்கின்றூர் என்பதனையும் சுட்டினுர்கள். நம்பியாண்டார் நம்பிகள் கூற்றுவ நாயனுர் புராணத்தை,

" நாதன் திருவடியே முடியாகக் கவித்து நல்ல
போதம் கருத்தில் பொறித்தமையால் அது கைகொடுப்ப
ஓதம் தழுவிய ஞாலம்எல்லாம் ஒருகோலின் வைத்தான்
கோதை நெடுவேல் களப்பாளன் ஆகிய கூற்றுவனே "

என மொழிந்தருளினுர்.

களந்தைக்கோன், களப்பாளன், களந்தை முதல்வன் என முறையே சுந்தரரும், நம்பியாண்டார் நம்பிகளும், சேக்கிழாரும் குறித்தமையைச் சுட்டிச் சில பயனுள்ள குறிப்புக்களைத் திருவாய் மலர்ந்தார்கள். களந்தை என்பது தொண்டைநாட்டில் உள்ள பொன் விளைந்த களத்தூர் என்பர் சிலர். சிலர், திருத்துறைப் பூண்டியை அடுத்த திருக்களர் என்னும் ஊருக்கு அருகில் அமைந்த களப்பாழ் என்பர் என ஊர் பற்றிய விளக்கம் அருளினுர்கள். நம்பியாண்டார் நம்பிகள் 'களப்பாளர்' என்ற சொல்லால் இவரைக் குறிக்கிறூர். களப்பாளர் என்பார் சிற்றரசர். களப்பிரராக இருக்கலாமோ என்ற ஒருஐயமும் தோன்றுகிறது. இதுபற்றி ஆராயவேண்டும் என ஆய்வுப் பொருள் ஒன்றை நல்கி மேலும் இதுபற்றிய கருத்துக்களை வழங்கினுர்கள்.

மெய்கண்டார் அச்சுத களப்பாளர் திருமகனுர். களப்பாளர் சிற்றரசர் மரபினர். நரசிங்கமுனையரையர் என்னும் பெயர் கொண்டு மற்றுமோர் ஆய்வுக் கருத்தை வழங்கினுர்கள்.

முனையரையர் என்ற சிற்றரசர் மரபின் பெயர் பின்னாளில் முனையதரைய கோத்திரமாக ஆயிற்று. இங்ஙனம் சொல்லாய்வு அருளிக் 'களப்பாளன் ஆகிய கூற்றுவன்' என்ற சொல்லால் களப்பாளர் என்பது சிற்றரசர் மரபு என்பதை விளக்கினார்கள்.

கூற்றுவநாயனார் தோள்வலிபடைத்த மன்னவர்க்குக் கூற்றுவராய்த் திகழ்ந்தவர். களந்தைப் பதியில் வாழ்ந்த குறுநிலமன்னர். திருவைந்தெழுத்து ஓதும் நியமத்தினர் திருவருளின் வலிமையால் பகைவரை வீழ்த்தியவர். அரசத்திருமுடி நீங்கலாகப் பிறஎல்லாச் செல்வங்களையும் உடையவர்.

கூற்றுவ நாயனார் நிலவுலகை ஆளும்பொருட்டுத் திருமுடி சூடக் கருதினார். தில்லைக்குச் சென்று, நவரத்தினத் திருமுடி சூட்டுமாறு தில்லைவாழ் அந்தணர்களை வேண்டினார். அவர்கள் "செம்பியர்தம் தொல்லை நீடும் குலமுதலோர்க்கு அன்றிச் சூட்டோம் முடி" என்றனர். தில்லையில் தம் குடியினருள் ஒரு குடியினரை மட்டும் இருக்கச் செய்தனர். மணிமுடியைக் காவல் புரிய வைத்தனர் சேரநாட்டிற்குச் சென்று அங்கு வாழத் தலைப்பட்டனர் தில்லைவாழந்தணர்கள்.

இதுகண்ட கூற்றுவ நாயனார் மனம் சோர்ந்தார். ஆடல் வல்லானை வணங்கினார். "அடியேன் தனக்கு முடியாகப் பெற்ற பேறு மலர்ப்பாதம் பெறவே வேண்டும்" எனத் துதித்துத் துயின்றார். இறைவன் கூற்றுவ நாயனார் கனவில் எழுந்தருளினார். தமது திருவடிகளையே முடியாகச் சூட்டினார். இறைவன் திருவடிகளையே மணிமுடியாகத் தாங்கினார் கூற்றுவர். திருமுடி தாங்கிய கூற்றுவர். "தம்பிரானார், புவியில் மகிழ்கோயில் எல்லாம் தனித்தனியே, பெரும் பூசனை" இயற்றினார். இங்ஙனம் பலகாலும் சிவநெறியோடு அரசியற்றி உமையாள் கணவன் அடிசேர்ந்தார் - இது புராண வரலாறு.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் புராண வரலாற்றின் இடையே பல அரிய குறிப்புக்களை அருளிச்செய்தார்கள். சோழமன்னர்கள் முடிசூடும் இடங்கள் ஐந்தனுள் சிதம்பரம் திருக்கோயில் ஒன்று என்பதை விளக்கினார்கள். முதல் இராசராசனுக்குப் பின் முதல் இராசேந்திரசோழன் கங்கை கொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டார். சிதம்பரம் ஸ்ரீ நடராசப் பெருமானைத் தரிசிக்க வசதியாக இது அமைந்தது. இடையில் காவிரி, கொள்ளிடம் வெள்ளம் குறிக்கிடுதராது, பலவகையிலும் சிதம்பரதரிசனத்திற்கு வசதியாகக் கங்கைகொண்டசோழபுரம்

அமைந்தது எனச் சுட்டினார்கள். மேலும் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்தவாறே இரண்டாம் குலோத்துங்கன், தில்லையில் சேக்கிழார் அருளிச்செய்து வந்த திருத்தொண்டர் புராணம் நிறைவேறுகின்றமை பற்றிக் கேட்டறிந்தான் எனக் கருதலாம். பல இன்றியமையாத காரணங்களை முன்னிட்டே அரசர்கள் தலைநகர் மாற்றம் செய்தார்கள் என்ற குறிப்பையும் அருளிச் செய்தமை சிரிய ஆய்வுரையாக அமைந்தது.

இங்ஙனம் தோத்திரம், சாத்திரம், புராண ஒப்பீடுகள் அமைய அன்றைய அருளுபதேசம் நிறைந்தது. கோடைக்காலம் ஆதலால் குளிர்ச்சியான கனிச்சாறு பண்டாரக்கட்டிற்கு வெளியே காத்திருந்தது; தாகசாந்தி பெற்றோம். இனிய சிந்தனைகளை ஏற்று மகிழ்வோடு இல்லம் திரும்பினோம்.

திருத்தொண்டர் புராணவழித் திருநெறியாம் சைவத்தைப் பெருக்கிவளர் குருமணியின் அருட்பாதம் தொழுதிடுவோம்!

வாழ்க குருமணிகள் !

கடிதம்

K. கோவிந்தராஜன்

திருஇந்தளூர், மயிலாடுதுறை,
13—4—1989.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் பொன்னார் திருவடிகட்கு, வணங்கி விண்ணப்பித்துக் கொள்வது.

அடியேன் மயிலாடுதுறை சைவசித்தாந்தக் கல்லூரி, இளம் புலவர் மாணவன். நான் பன்னிரு திருமுறைகள் தான் இறைவனுக்குப் பாடப்பெற்றது என்று கருதி இருந்தேன். சந்தான குரவர்கள் இயற்றிய சாத்திரங்கள் என்பது பற்றித் தெரியாத நிலையைக் குருமகாசந்நிதானம் மாலைநேரக் கல்லூரி அமைத்துப் படிக்கச்செய்து விளக்கியருளியுள்ளீர்கள். பொறுமையோடு கருத்துக்களைக் கூறும் ஆசிரியர்கள் திரு. சுந்தரமூர்த்தி ஐயா அவர்களும் திரு. சொ. சிங்காரவேலன் ஐயா அவர்களும் எங்கள் ஐயத்தைப் போக்குகிறார்கள். ஞானமார்க்கத்துக்கு உரிய வழிகளை விளக்கமாக அன்போடும் ஆதரவோடும் பாடம் நடத்தி வருகிறார்கள். நாங்கள் பல தொழிலில் இருப்பதால் தேர்வில் எப்படி எழுதப் போகிறோம் என்ற அச்சம். ஆனால் ஆலவாய்ச் சொக்கேசன் திருவருளும், குருவருளும் துணை நிற்கும் என மன உறுதி உண்டு என்பதால் தங்கள் திருவடியை வணங்கி ஆசி அருளுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் (நாண்மங்கல விழா) ஆலய வழிபாடு திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்மை உடனாகிய ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலில் மிருத்யுஞ்சய ஹோமம், ஏகாதசருத்ரஜபம் முதலியவற்றுடன் 15—4—89 சனிக்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி ஸ்ரீ அபிராமி அம்மைக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்கு சகஸ்ரநாம அருச்சனையும் நடைபெற்றன. 'இடர்களையும் திருப்பதிகங்கள்' என்ற நூல் வெளியிடப் பெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந்தருளி வழிபாடாற்றி வழிபாட்டில் கலந்து கொண்ட அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்கின்றது. இம்மாதம் 95 ஆவது அருளுபதேசம் 7—5—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது.

திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகப் 'பொய்யடிமை இல்லாத புலவர்' புராணம் உபதேசித்தார்கள். கபிலர், பரணர், நக்கீரர் முதலிய சங்கத்தமிழ்ப் புலவோர் பொய்யடிமை இல்லாத புலவராவர் எனக் குறித்து, அவர்கள்தம் அருளிப்பாடுகள் பற்றிக் குறிப்பிட்டார்கள். மாதச் சிறப்பு நாட்களில் தருமை ஆதீனக் குருமுதல்வர் குருபூசைத் திருநாள் நிகழ இருத்தலையொட்டிக் குருவருட் சிறப்புப் பற்றியும் வழிபாட்டின் இன்றியமையாமை பற்றியும் விளக்கம் அருளினார்கள்.

தருமை ஆதீன அடியார்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அடுத்து 96 ஆவது அருளுபதேசம் 4—6—89 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெறுவார்களாக.

ஸ்ரீ உமாபதி தேவநாயனுர் குருபூசை விழா

சந்தான குரவருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதி தேவநாயனுர் குருபூசை விழா சித்திரை அத்தநாள் கூடிய 19—4—89 புதன்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும், மாலை சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் சமயாசாரியர் சந்தானுசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தருமையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை, மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடு ஆற்றினுர்கள். தருமபுரத்தில் மாலை 6 மணி அளவில் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம்.ஏ., பி.எட்., உமாபதி தேவநாயனுர் அருள் வரலாறு பற்றியும், புலவர் திரு. கே. கணபதி, பி. லிட்., பி. எட்., உமாபதி தேவ நாயனுர் அருளி நூல்கள் பற்றியும் உரை நிகழ்த்தினர். சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் ஸ்ரீ சந்தானுசாரியர் சந்நிதியில் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. திருமுறைக் கலாநிதி திரு. எம். கனகசபை பிள்ளை திருமுறைப்பாராயணம் நிகழ்த்திஞர். பிரம்மஸ்ரீ சிவராஜ தீக்ஷிதர் தலைமையில் தருமை ஆதீனக் கலைக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., 'ஸ்ரீ உமாபதி தேவ நாயனுர் வாழ்வும் வாக்கும்' பற்றி விரிவுரை நிகழ்த்திஞர். அன்பர்கள் தரிசித்தும் சொற்பொழிவு கேட்டும் பயன்பெற்றனர்.

ஸ்ரீ முத்துச் சட்டைநாதசுவாமிக்குச் சிறப்பு வழிபாடு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு 28—4—89 வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றது. காலையில் ஸ்ரீ முத்துச் சட்டைநாத சுவாமி யதாஸ்நானத்திலிருந்து புறப்பாடாகி வலம்புரி மண்டபத்திற்கு எழுந்தருளலும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றபின் இரவு புறப்பாடாகி யதாஸ்நானத்திற்கு எழுந்தருளலும் அதன்பின் புனுகாப்புத் தரிசனமும் நிகழ்ந்தன. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குத் திருவருட்பிரசாதம் வழங்கினுர்கள். தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரிப் பேராசிரியர், திரு. சாமி. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., ஆபதுத்தாரணர் மாலை பற்றி உரை நிகழ்த்தினுர். அன்பர்கள் சுவாமி தரிசனம்செய்தும் சொற்பொழிவு கேட்டும் பயன்பெற்றனர்.

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும், சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருககோயிலிலும் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை விழா சித்திரைச் சதயநாள் கூடிய 30—4—89

ஞாயிறன்று சிறப்பாக நடைபெற்றது. காலை தருமை ஸ்ரீ சொக்கநாதர் பூசைமடத்தில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் பாராயணம் செய்யப்பெற்றது. சமயாசாரியர், சந்தானசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் மாலை 6-30 மணி அளவில் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட், அப்பர் சுவாமிகள் வரலாறு என்பது பற்றியும், புலவர் திரு. சே. கணபதி பி. லிட்., பி. எட்., அவர்கள் அப்பர் சுவாமிகள் தேவாரம் பற்றியும் உரையாற்றினர். இரவு 9 மணியளவில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திருவீதியுலா நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் காலை, மாலை இருவேளைகளிலும் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் மாலை சமயாசாரியர் சந்தானாசாரியர்கட்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீ சமயாசாரியர் சந்நிதியில் திருமுறைப் பண்ணிசையும் சிரோமணி த. சுப்பிரமணிய தீக்ஷிதர் தலைமையில் சொற்பொழிவும் நடைபெற்றன. டாக்டர் திரு சு. சுவாமிஐயா, 'அப்பர் அருந்தமிழ்' பற்றி உரையாற்றினர். அன்பர்கள் வழிபாடு ஆற்றியும் சொற்பொழிவு கேட்டும் பயன் பெற்றனர்.

திருவாமூரில் :

அப்பர் சுவாமிகள் அவதாரம் செய்த திருவாமூரில் 28, 29, 30—4—89 ஆகிய நாட்களில் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. 28—4—89 அன்று மாலை ஓதுவாமூர்த்திகளும் அன்பர்களும் ஸ்ரீ பசுபதீசுவரர் திருக்கோயிலிலிருந்து ஸ்ரீ அப்பர்சுவாமிகள் திருக்கோயிலுக்குத் திருமுறைப்பாராயணத்துடன் சென்று வழிபாடாற்றினர். மூன்று நாட்களிலும் பல்வேறு அங்கங்களுடன் விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. கருத்தரங்கம், பண் ஆராய்ச்சி மாநாடு, வழக்காடு மன்றம், இன்னிசை விரிவுரை, நாமாவளி பஜனை முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அறிஞர்கள் பலர் பங்கேற்றனர். ஸ்ரீ திருநாவுக்கரசுசுவாமிகள் குருபூஜைநாளில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாணையின் வண்ணம் மயிலாடுதுறை திரு. ப. சொக்கலிங்க ஓதுவாமூர்த்திகளுக்குத் 'திருமுறைக் கலாநிதி' என்னும் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கப்பெற்றது. திருநெறிய தமிழ் வாணர்களும் சிவநேயச் செல்வர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

சித்திரைப் பெருவிழா

சீகாழியில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 11—4—89 முதல் சித்திரைத் திருவிழா தொடங்கி நடைபெற்றது. 12—4—89 புதன் அன்று திருமுலைப்பால் திருவிழா. அன்று காலை தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீ திருஞான சம்பந்தருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீ திருஞானசம்பந்தர் பிரமதீர்த்தக் கரைக்குச் சிவிகையில் எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெற்றது. அற்புதவிளக்கவுரைகளைக் குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் தொடங்கிவைத்தார்கள். திருஞானசம்பந்தர் பிரமதீர்த்தக்கரைக்கு எழுந்தருளியானவுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீன ஓதுவா மூர்த்தி ஏ. எம். சம்பந்தமூர்த்தி ஓதுவாருக்குத் 'திருமுறைக் கலாநிதி' என்ற பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கிப் பொற்கிழி அளித்துப் பொன்னாடைபோர்த்திச் சிறப்புச் செய்தருளினார்கள்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசி துணைக்கொண்டு திருக்கோயில் பெருவிழாக்களில் மக்கள் பங்கேற்றனர். சீகாழி, செங்குந்த மகாஜன சங்கம், சீகாழி மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மன்றம், சீகாழி கா ர ஜர் படிப்பகம், அன்பு நண்பர்கள் குழு. சீ ாழி நகர வியாபாரிகள் முதலிய அமைப்புகளும் திரு. எம். துரைரா ஜ். திரு. எம். வி. கணேஷ் குமார், டாக்டர்திரு. ஆர். வி. நாதன் (தஙகுடு) மற்றும் மயிலாடு துறை, வழக்கு அறிஞர் திரு. சி. ஆர். குஞ்சிதபாதம் ஆகியோரும் உபயதார்களாகப் பங்கேற்று நிகழ்ச்சிகளை நடத்த முன்வந்து தொண்டு புரிந்தனர்.

திருவிழா நாட்களில் கருத்தரங்கம், வழக்காடுமன்றம், ஸ்ரீ குமர குருபரர் 300ஆவது ஆண்டு நினைவு விழா, திருமுறைவிழா, தேவார வகுப்பு ஆண்டு விழா, பட்டிமண்டபம் முதலியனவும் இன்னிசை, பரத நாட்டியம், இன்னிசை விரிவுரை ஆகியனவும் சிறப்பாக நடைபெற்றன.

திருக்கடவூரில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைப் பெருவிழா 11—4—89 முதல், தொடங்கி நடைபெற்றது. 16—4—89

காலசம்காரத் திருநாளன்று தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில்எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குப்பிரசாதம் வழங்கினர்கள். உற்சவ நாட்களில் சொற்பொழிவுகளும் திருமுறை விழாவும் நடைபெற்றன.

திருப்பனந்தாளில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 11—4—89 முதல் சித்திரைப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. உற்சவநாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. அன்பர்கள் சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்

திருவையாற்றில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 11—4—89 முதல் சித்திரைப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. தன்னைத்தான் அருச்சித்தல், சகோபுரக்காட்சி, ஏழூர் வலம் வரல் முதலிய விசேஷத் திருநாட்கள் நடைபெற்றன. உற்சவ நாட்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. அன்பர்கள் சொற்பொழிவுகளைக் கேட்டும் சுவாமி தரிசனம் செய்தும் பயன்பெற்றனர்.

நெல்லையில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு விழா

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நிறைவு விழா 9—4—89 ஞாயிற்றுக்கிழமை மாலை நெல்லைச் சந்திப்பு இந்து மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் "கயிலை மாமுனிவர்" ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் எழுந்தருளி ஆசியுரை வழங்கினர்கள். சிவபூஜை பேச்சியப்பன் இறை வணக்கம் பாடினர். கவிஞர் பூந்துறை தியாகராசன் கவி மலர் பாடினர். பாளை சைவ சபைத் தலைவர் சைலப்பன் வரவேற்றர் சைவசபை வெளியிட்டின சகலகலாவல்லி மாலை தெளிவுரை நூலை, சுவாமிகள் வெளியிட, முதல பிரதியை இந்துக் கல்லூரிச் செயலர் அம்மையப்பன் பெற்றுக் கொண்டார். குமரகுருபரர் ஆய்வுமைய வெளியீடான குமரகுருபரர் நெறியில் நமது கடமைகள் என்ற நூலை சுவாமிகள் வெளியிட, முதல் பிரதியைப் பாபநாசம் கல்லூரி முன்னாள் முதல்வர், திரு. சாம்பசிவம் பெற்றுக் கொண்டார். விழாவில் சிவமணி ம. சிவசம்புக்குச் "சிவநெறிச் செல்வர்" பட்டமும கவிஞர் திரு. சு. ஆறுமுகத்திற்கு 'இலக்கிய வேந்தர்' பட்டமும் பூந்துறை தியாகராசனுக்குக் 'கவிக்கொண்டல்' பட்டமும் கு. ஆறுமுகத்திற்கு சைவக் கவிமணி பட்டமும் சுவாமிகள வழங்கினர்கள். பேராசிரியர்

பா. வளன் அரசு, காளிமுத்துப் பாண்டிகன் புத்தனேரி செல்லப்பா, கணபதி, சுப்பிரமணியன், கந்தகுமார், பிச்சுமணி, மயிலப்பன், சுந்தரவிநாயகன் ஆகியோர்க்குச் சுவாமிகள் பொன்னாடை போர்த்தினர்கள். ஆசியுரை வழங்கிய கயிலை மாமுனிவர் அவர்கள் குமாரகுருபரசுவாமிகளின் தனிச் சிறப்புகளை விரித்துரைத்தார்கள். மாணவிசிவ விஜயலெட்சுமி, மாணவர்கருத்தப்பாண்டி, பேராசிரியை ப. நீலா, டாக்டர் மு. சிவச்சந்திரன், சித்தாந்த நன்மணி சண்முகவேல், கவிஞர் கி. சு. ஆறுமுகம், முதலியோர் பேசினர்கள். தச்சநல்லூர் சிவப்பிரகாச வித்யாலய மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் விழாவின் சிறப்பு அம்சமாகும். சிவசைலம் மில் அதிபர் ச. சைலப்பன் சிவமணி ம சிவசம்பு ஆகிய இருவரும் விழா ஏற்பாடுகளைச் செய்தனர்.

கடிதம்

அ. ஆ. சுப்பிரமணியன் — கோயம்புத்தூர், 11—4—89.

தருமை ஆதீன குருமகாசந்நிதானத்தின் செம்மலர் நோன்றாள் சென்னி சேர்த்து, தருமை அருள்பெறு நெல்லை அருணகிரி இசைக் கழகத் தொண்டன் குருவின் பொன்னார் திருவடிகளில் பணிவுடன் சமர்ப்பிப்பது :-

பங்குனித் திங்கள்–21ஆம் நாள் காலை குருமகாசந்நிதானத்தின் பேரருள் துணை கொண்டு, அருள்மிகு சொக்கநாதர், ஞானபுரீசுவரர் சோமவார சிவதரிசனமும், அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கை தரிசனமும், கஜபூசை, கோபூசை, குருபூசை கால்கோள் ஆகிய வழிபாட்டு நிகழ்ச்சிகளும் கண்டு இன்புறும் பேறு அடியேனுக்கும், குடும்பத்தினருக்கும் கிட்டியது.

தவிரவும் ஆதீன அருளாட்சியிலுள்ள திருநள்ளாறு கோவிலில் அன்று மாலை பிரதோஷ வழிபாட்டு தரிசனமும், மறுநாள் திருக்கடவூர் அருள்மிகு அபிராமி அன்னை உடனுறை அமிர்தகடேசுரர் காலசம்ஹார – மூர்த்தங்களின் தரிசனமும் கிடைக்கத் திருவருள் கூட்டுவித்தது மேலும் அடியேனின் தம்பியின் அறுபதாண்டு நிறைவு நிகழ்ச்சிகள் அருள்மிகு அமிர்தகடேசுவரர் திருமுன்பு நடைபெற்ற பாங்குபோற்றுதற்குரியது. கிரியைகள் தொடங்குமுன் அவ்வற்றின் நோக்கம், சுலோகங்கள், மந்திரங்களின் பொருள் விளக்கம் கூறப்பட்டு நிகழ்த்தப்பட்ட முறை எல்லோரின் கவனத்தையும் ஈர்த்தது. இவைகள் யாவும் தருமை ஆதீனத்திற்கே உரிய நடைமுறைச் என்பதுணர்ந்த பொழுது மெய் சிலிர்த்தது.

❋ எதிர்காலம் ❋

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கில௵ வைகாசி௴ 1௳ முதல் 32௳ முடிய)

(14—5—89 முதல் 14—6—89 முடிய)

சுக்கில௵ வைகாசி௴ 1௳ பானுவாரம் பூரநக்ஷத்திரம் தைதுலைகரணம் கூடியகாலத்தில் சூரிய உதயம் முதல் 27 நாழிகை 43 விநாடிக்கு துலா லக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சகரான சூரிய பகவான் உலக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசி சங்கிரமணமாக வைகாசி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணிய காலம் சங்கிரமண கால கிரகஸ்திதியின் பலனாவது உலகத்தில் சுபிட்சம் ஏற்படும். அறச் சாலைகளில் தர்மங்கள் வெகுவாக நடைபெறும். பிரஜைகள் நெறியுடன் செயல் புரிந்து நலலாக்கம் பெறுவர். இறையருளில் அரசுநீதியுடன் பிரஜைகளை இரட்சித்து வருவதினின்றும் நாடுகளில் வறுமைக் கோட்டுக்குள்ளானோரும் கல்வி, தொழில் துறை, பொருளாதாரம் ஆகியவை சமத்துவமாக அடைந்து க்ஷேமமாக வாழ்வர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வர கட்டளையில் சமயாசாரியர்களாக வந்து சிவசமயம் பரிபாலிக்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் உலகத்தில் ஆங்காங்கு திருமடங்கள் நிறுவியும் பிரஜைகளுக்கு தெய்வபுனித ஆசார நெறி முறைகள் தம்வழி உள்ள தம்பிரான் சுவாமிகள் மூலம் போதிக்க அனுக்கிரகம் செய்தும் அருள்வார்கள். எங்கும் சிவநேயர்களின் திருச்சபைகள் ஏற்பட்டுத் தெய்விகத்தின் உட்பொருள் விளக்க விமர்சனம் நிகழ்வதாகும். உலக மாந்தர்கள் வேதசாஸ்திர ஞானம் கலைஞானம் சைவசித்தாந்த உயர் ஞானம் குருவழி போதனாசிரியர்கள் மூலம் அறிந்து அந்நெறியில் பரிச்சயமாகி உயர்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் விசேஷ பூசைகள் வசந்தோற்சவங்கள் நன்கு நடைபெற்றுவரும். மக்கள் நிஷ்களங்க மனதுடையவர்களாகி பரமானந்தமடைவர்; மன அமைதியில் செவ்விய வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் நான்கு வகையில் வந்து நிறையும் இரத்தினபூஷணம் தரும். மனோற்சாகம் திடசித்தபான்மையில் அனைத்து காரியங்களும் நடந்துகொண்டிருக்கும். ஜுன் 6 தேதியில் அரசாங்கத்திலிருந்து நற்செய்தி வரும். வித்துவத்துவத்தில் பிரசித்தம் ஆகுதல், நல்லன ஏற்படுதல் ஆகும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். மே 20, 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அதிகம் தரும். அவசர முன்மொழிதலால் அந்தரங்க விஷயம் வெளிப்பட்டுக் காரியத் தயக்கம்காணும். ஜுன் 6 தேதியில் அதிர்ஷ்டவசமாக ஓர் பொருள் வரவாகும். 8 தேதிக்கு மேல் தேங்கியிருந்த எல்லாக்காரியங்களும் ஜெயப்பிராப்தியாகி மன அமைதியை ஏற்படுத்தும். புத்திரர் பௌத்திரர்களுக்கு க்ஷேமம் தரும். தாம்பத்திய வாழ்க்கை இனிது நடந்து வரும். மே 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிரப்பலனாக நடக்கும். பண வருமானம் கெடியில் வரச்செய்யும். தர்மங்களில் டாம்பீகமாக சம்பிரதாய விஷயங்களில் அவசிய செலவினங்களை ஏற்று நடத்தும். அரசாங்கக்காரியங்களில் ஈடுபாடும் குறிப்பிட்ட எல்லாக்காரியங்களிலும் ஜெயபிராப்தியாகி வரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். பந்துக்களின் அனுசரணை பலம் தரும். மே 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் மூன்றுவகையில் வந்துநிறையும். வித்துவத்துவம், கலைத்துறையில் மதிநுட்ப விஷயங்களில் பிரசித்தமும் ஆய்வு செய்யும் ஆற்றலும் உண்டாகும். சுறுசுறுப்பு மிகும். நல்ல வாகன சௌகரியம் தரும். நெருக்கடியாக உள்ள எல்லாக் காரியங்களும் தெய்வகடாட்சத்தினால் சித்தியாகநடக்கும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மே 27,28 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கணிசமாக வரும். இரத்தின பூஷணங்கள் அளிக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகத்தில் சிறப்புத் தரும். உயர் பதவி அளிக்கும். ஜுன் 6 தேதிக்கு மேல் அரசாங்கத்திலிருந்து நற்செய்திவரும். பூர்வபொருளில் ஓர் முதல் முடங்கினும் ஆதாயமானதே ஆகும். தாரம் புத்திரர்களுக்கு நலம் தரும். மே 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பண வருமானம் நல்லவிதத்தில் வரவாகும். வித்தியா வியாபாரதிகளில் கலைத்துறையில் உத்தியோகம் ஆகியவற்றில் பிரசித்தமும் உயர்பதவியும் அளிக்கும். வீடு வாகனம் பூர்வபொருள் பிராப்திகளில் நல்ல சௌகரியமும் பிரயோஜன சித்தியும் ஆகும். தாம்பத்திய வாழ்க்கை சாஸ்திரோக்த தான தர்மத்துடன் தெய்வ பக்தியில் நடக்கும். ஜுன் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அதிகம் தரும். வித்தியா வியாபாரதிகளில் கலைத்துறையில் உத்தியோகத்தல் ஜுன் 6 தேதிக்கு மேல் விசேஷ பலன் தரும். பரோபகார நற்பணிகள் சுய நலமின்றிச் செய்துவரும். மனோதைரியப் போக்கில் எல்லாக் காரியங்களையும் செவ்வையாக நடத்திவரும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜுன் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் அரச கண்யத்திற்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். அடிக்கடி வெளியூர்ப் பயணம் ஏற்படும். மயக்க நலிவு அல்லது ஓர் விபத்துவந்து தப்பும். வித்துவத்துவம், கலைத்துறையில் ஜீவனோபாயம் தொழில்களில் நல்லன ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாரசௌக்கியம், புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜுன் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மே 18, 19 தேதிகளில் கண்ய செலவு ஆகும். வியாழன், வெள்ளி சுபம்.

9 தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் தரும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் விசேஷ நற்பலனை உண்டு பண்ணும். ஜுன் 6 தேதியில் அரசு விகிதங்களில் நல்லன ஏற்பட்டு வரும. வீடுபிராப்தி இயந்திர வாகன பிராப்தியில் நல்லன ஏற்படச் செய்யும். எல்லாக் காரியங்களிலும இருந்த மந்தஸ் திதி நீங்கிச் சுறுசுறுப்பாகப் பூர்த்திசெய்தல் ஆகும். தாம்பத்தியவாழ்வில் பிணக்கு நீங்குவதாகும். ஜுன் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம்வரும். அவசிய செலவினங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறைகளில் எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்படும். பூமி கட்டிடங்களில் சௌகரியமும ஆதாயமும் தரும். விவாத வழக்குகள் வெல்லும. எந்த நெருக்கடி பிரச்சினையிலும் நல்லோர்களால் அனுகூல வாய்ப்புகளை உண்டுபண்ணும். தாரம் புத்திரர்களின் நலம நன்றாக இருந்துவரும. மே 4 ஜுன் 9 10 தேதிகள் சந்திராஷ்டமம. திங்கள், செவ்வாய் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வரும. பூமி இயந்திரங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்தும. வித்துவத்துவம, கலைத்துறையில் எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்பட்டுவரும, ஜுன் 6 தேதிக்கு மேல அரசாங்கத்திலிருந்து நற்செய்திவந்து சந்துஷ்டி நிலவும. எல்லாக்காரியங்களும ஜெயப்பிராப்தியாக நடக்கும். தாரம புத்திரர்களின சௌக்கியம் நன்றாக இருந்துவரும. மே 15, 16, 17 ஜுன் 12, 13 ஆம தேதிகள் சந்திராஷ்டமம. மே 25, 26 தேதியில நல்லவித செலவு. வியாழன், வெள்ளி சுபம.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும், பணவருமானம் கௌரவத்துக்கு ஏற்பவரும். வித்துவத்துவம், கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படும். போதனை முறை நூல் எழுதுதலில் ஆழ்ந்த சிந்தனை இருந்துவரும். ஜுன் 8 தேதியில் விலகி இருந்த பந்து ஒன்று கூடுவர். வாகன சௌகரியம் இருப்பிட சௌகரியம் மேலாக இருந்துவரும். உயர்ஸ்தான அமர்வு உண்டுபண்ணும். எல்லாக் காரியங்களும் மனோலயப்படி திருப்தியாக நடத்துவரும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மே 18 19 ஜுன் 14இத்தேதிகள்சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்,

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-V

பாடம் - 4.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகரின் திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை !

பண்டார சாத்திரங்கள் :

ஸ்ரீ காசி அன்னபூரணியம்மை திருவருட்பா

முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பி. எச்டி.,

தருமபுரம்.

தருமை ஆதீனத்துப் பத்தாவது குருமூர்த்திகளாக விளங்கியருளியவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களாவர். அவர்கள் நிகழ்த்தியருளிய அற்புதங்கள் பலவாதல் போலவே அருளிய நூல்களும் பலவாம். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தரிசித்து வாழ்ந்துவந்த அவர்கள் காசியம்பதிக்குச் சென்று பல ஆண்டுகள் வதிந்தருளி இறைவழிபாடாற்றி வந்தார்கள். அது பொழுது அவர்கள் அருளிய நூல்கள் பத்தாம். இவ்விதழ்வழிச் சிந்தனைக்குரியது ஸ்ரீ காசி அன்னபூரணியம்மை திருவருட்பா. இது காசித் திருப்பதியை மையமாகக் கொண்டு எழுந்தது. அப்பதியைப்பற்றிய சிறப்புக்கள் பலவும் இத்திருவருட்பாவிலும், ஸ்ரீ காசி கேதாரகௌரியம்மை திருவருட்பா, ஸ்ரீ காசி பாகீரதியம்மை திருவருட்பாக்களிலும் விரித்துரைக்கப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தகுவன சில,

1. காசியில் எழும் ஒலிகள்.
2. காசியில் வழிபடத்தகும் மூர்த்திகள்.
3. வீடுபேறு வழங்கும் விறு.

காசியில் எழும் ஒலிகள் :

ஒரு புண்ணிய நகரில் கேட்கத்தகும் ஒலிகள் அறவுணர்வும் இன்படஉணர்வும், இறையுணர்வும் மீதூரத்தக்கனவாய் அமைதல் வேண்டும். இவ்வகையில் காசியில் கேட்கத்தகும் ஒலிகளை

மத்தமா கரியொலியும் வாசிப்பெருக் கொலியும்
வருமிரதம் ஊரும் ஒலியும்
மைந்தர் பருவந்தனின் மணஞ்செய் ஒலியும் மகளிர்
மங்கலத்து ஒலியும் வண்டு
திந்திமிதி என்று நறவுண்டு விளையாடுந்
திருந்தஒலி நீத்தஒலியும்
செந்தமிழ்ப் புலவருடன் ஓராறு சாத்திரம்
செப்பொலியும் வேதஒலியும்
சுத்தியொடு பிரமர் இந்திரன் முதலினோர்கள் நனி
துதிசெய் சிவ கீத ஒலியும்
தொண்டர் அரகரவென்று பல்லாண்டு இசைத்திடும்
துய்ய மந்திர ஒலியுடன்
அத்தனர் திருவிழா ஒலி பெருகு காசிவாழ்
அங்கயற் கண்ணியுமையே
அருட்கடை செய்து ஆளுவாய் கேதார கௌரிநின்
அடிபரவும் அடிமை என்றே.

என வரும் ஸ்ரீ காசி கேதாரகௌரியம்மை திருவருட்பாவில் குறிக்கின்றார்.

காசியில் வழிபடத்தகும் மூர்த்திகள் :

காசியில் வழிபடத்தகும் மூர்த்திகள் பல. எனினும் சிறப்பாகக் காசித் தொண்டி விநாயகர், விசுவநாதர், விசாலாட்சி, அன்னபூரணி, கேதாரீசுவரர், தண்டபாணி, காலபைரவர் ஆகியமூர்த்திகள் குறிப்பிடத்தக்கனவாம். குருமூர்த்திகளும் இத்தெய்வங்களைக் குறித்து வாழ்த்துவதோடு காசியில் அறம் செய்வோர்களையும் வாழ்த்தி அருளுகின்றார்.

வீடுபேறு வழங்கும் வீறு :

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளர்
காஞ்சி கழுக்குன்றம் மறைக்காடு அருணைகாளத்தி
வாஞ்சியம் என் முத்தி வரும்.

என வீடுபேற்றுத் தலங்களைக் குருஞானசம்பந்தர் அருளுவர். அம்மூர்த்திகள் குறிக்கும் திருப்பதிகளுள் காசிப்பதியும் ஒன்றாகும்.

காசியில் இறக்க முத்தி என்பர். காசியம்பதியில் இறந்த உயிர்களை உலக அன்னையாகம் பெருமாட்டி, தம் மடிமீது இருத்தி இடது கையால் அணைத்துத் தம் வலது கையில் முந்தானைகொண்டு, பிறவி வெப்பத்தை மாற்றித் திருவைந்தெழுத்தை அருளி வீடு பேற்றை எய்துவிப்பள். இதனைக் குருமூர்த்திகள்,

" கௌரியுள் காவம்ப
காருண்ய வுத்தரியக்
காற்றிறைவர் தாரகச் சத்தமொடு எறிந்தருட்
காசியூர் ஆனந்தமாம்
சிவம் எனுங்கரை துறையில் ஏறஅருள் எண்ணிலாச்
செகதண்டம் ஈன்று வைத்துச்
சிறைக்கரம் அணைக்கும் மயிலே "

எனவும்,

" அகில நாதர் குருவாய்ப்
புவனங்கள் தொழமந்த்ர மறைசொல "

எனவும்வரும் பாடற் பகுதிகளால் குறித்தருளுகின்றார்.

ஸ்ரீ காசி அன்ன பூரணியம்மை திருவருட்பா :

கொடுக்கக் குறையா அன்னத்தைக் கொண்டருளும் இறைவியாய இப்பெருமாட்டியை நோக்கிப் பாடியருளிய பதிகம் இதுவாகும். இங்கு அன்னம் எனக் குறிக்கப் பெறுவது சோறு மட்டுமன்று, வீடுபேறும் ஆகும். அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் எனவரும் வாக்கால் அன்னம் வீடுபேருதலும் காணலாம். இப்பதிகத்தில் காணும் செய்திகளாவன:-

1.	சிவனும் சத்தியும்	4.	அருமைந்தர் மூவர்
2.	ஆயிரம் திருநாமம்	5.	பாடுவார் பசிதீர்ப்பாய்
3.	நவந்தருபேதம்	6.	இலன் என்னும் எவ்வம் உரையாமை.

சிவனும் சத்தியும் :

இறைவன் தன்னிலையில் சிவம் என்றும், உயிர்கட்கு அருளும் நிலையில் அவ்வருளாற்றலாய சத்தி என்றும் பெயர் பெறுவன். கதிரவனிடத்திருந்து அவ்வொளிக்கதிரைப் பிரிக்க இயலாதவாறு போலச் சிவத்தினின்று சத்தியையும் பிரிக்க வியலாது இயைந் திருக்கும். 'சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்', 'அம்மையொடு

அப்பனுகிச் செறிவு ஒழியாது நின்ற சிவம்' என ஞானநூல்கள் நவிலுதற்கேற்ப, குருமூர்த்திகளும் சம்பு சமவாய சத்தி (2) எனக் குறிப்பிடுவர். இவ்வாறு பிரிவின்றி இயைந்திருப்பினும் சிவத்தை அப்பனாகவும், சத்தியை அன்னையாகவும் அழைக்கும் மரபு பண்டு தொட்டே நிலவி வருகின்றது.

இவ்வாறாய அருட்சத்தி உயிர்கட்கு உதவுங்கால் ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு பெயர் பெற்றிலங்கும். தனக்கு ஒப்புயர்வுற்ற நிலையில் பராசத்தி என்றும், உயிர்கட்கு அறிவு, இச்சை, செயல் களை விளைவிக்குங்கால் அறிவாற்றல், விருப்பாற்றல், செயலாற்றல் என்றும், உயிர் தான்செய்த வினையை நுகர்தற்கேற்ப, அதன் அறிவை மறைக்குங்கால் மறைப்பாற்றல் (திரோதானசத்தி) என்றும் பெயர் பெறும். இதனைப்,

பிராமிநா ராயணி ரவுத்திரி மகேச்சரி
பெலமனோன் மணிநாதமாம்
பெரியவர சிவசத்தி ஓங்குங்கிரி யாசத்தி
பிரிவிலா ஞானசத்தி
சராசரமும் நிறையும் இச்சாசத்தி ஆதியாம்
தரு திரோதான சத்தி
சர்வபூ ரணபரா சத்திசிவ சமவாய
சர்வக்ஞ சூடாமணி (10)

எனத்தொடங்கும் பாடலால் குருமூர்த்திகள் விளக்கியருளுவர்.

ஆயிரம் திருநாமம் :

இறைவன் ஒருவனேயாவன். 'ஒன்றே குலம் ஒருவனே தேவனும்' 'ஒருவன் என்னும் ஒருவன் காண்க' 'ஒன்றே பதி' என வரும் திருவாக்குகள் இதனை மெய்ப்பிக்கும். எனினும் யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கும் அப்பரம்பொருளை ஊர்தொறும் அருவுருவத் திருமேனியாகக் கொண்டு வழிபட்டு வரும் நிலையில் அவரவர்களும் ஒரு பெயரிட்டு அழைத்து வணங்கி வருகின்றனர். இதனையே "ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" எனவரும் திருவாசகமும் விளக்கிக் காட்டும். இறைவனின் நிலை இதுவாதல் போலவே, அவ்விறைவனினின்றும் பிரிவின்றி இயைந்து நிற்கும்

இறைவி நிலையுமாம். இவ்வகையில் குருமூர்த்திகள் பதினான்கு திருப்பதிகளைக்குறித்து, அவ்வவ் விடங்களிலும் எழுந்தருளியிருக்கும் இறைவிக்கு உளவாய பெயர்களைக்குறித்து, அத்திருப் பெயர்களையுடைய திருவுருவங்கள் அனைத்தும் அன்னபூரணியே எனப்போற்றி மகிழ்கின்றார். அவ்வாறு குறித்தருளும் திருப்பதிகள்:-

கன்னியாகுமரி	—	குமரி அன்னை
திருநெல்வேலி	—	காந்திமதி
மதுரை	—	மீனாட்சி
இராமேசுவரம்	—	பருவதவர்த்தனி
திருவாரூர்	—	கமலாம்பிகை என்னும் [பராசத்தி
சிதம்பரம்	—	சிவகாமசுந்தரி
சீர்காழி	—	உமையம்மை
திருவெண்காடு	—	பிரம்மவித்தியாநாயகி
தருமபுரம்	—	ஞானம்பிகை கீழ்க்கோயில் [அபயாம்பிகை
மயிலாடுதுறை	—	அபய வரதாம்பிகை
வைத்தீசுவரன்கோயில்	—	தையல்நாயகி
திருக்கடவூர்	—	அபிராமி மங்கை
திருவானைக்கோயில்	—	அகிலாண்டநாயகி
திருவையாறு	—	அறம்வளர்த்தநாயகி
காஞ்சிபுரம்	—	காமாட்சி
காசி	—	கௌரி, விசாலாட்சி
இங்குலை	—	ஜ்வாலாமுகி
திருவண்ணாமலை	—	உண்ணாமுலையாள்
நாகப்பட்டினம்	—	நீலாயதாட்சி
திருப்பருப்பதம்	—	பிரமராம்பிகை
கயிலை	—	பார்வதி

கன்னியகுமாரி அருள் காந்திமதி மீனாட்சி
கருணைபரு வதவர்த்தனி
கமலைப் பராசத்தி சிவகாம சுந்தரி
காழியுமை பிரமவித்தை

தன்னிகரி லாஞான அபயவர தாம்பிகை
தையல் அபிராமி மங்கை
தந்த அகிலாண்டநாயகி அறம் வளர்த்தவள்
தன்னருள் செய் காமாட்சி யிங்கு
என்னையாள் கௌரிஜ் வாலாமுகி உண்ணாமுலை
இலங்கு நீலாயதாட்சி
எழிற் பிரம ராம்பிகை இலங்கு பார்வதியாதி
எண்ணிலா நாமரூப
அன்னையாய்க் காசிமுதலாகிய தலத்து விளையாடிடு
விசாலாட்சியாம் (3)

என்பது அக்கருத்தமைந்த பாடலாகும்.

நவந்தருபேதம் :

இவ்வாறு நாம் பெயரிட்டு அழைக்கும் பெயர்கள் பலவாதல் போல இறைவன் உயிரது வினைக்கீடாய பிறப்புக்களைத் தந்து அவற்றை உய்யக் கொள்வதற்கெனக் கொள்ளும் வடிவு வேறுபாடுகளும் பலவாம். அவை அரு, அருவுரு, உரு ஆகிய மூவகையில் அடங்கும். இவ்வகையில் இறைவன் கொள்ளும் திருமேனிகளுக்கேற்ப இறைவியும் உருவம் கொள்வள். எத்திறம் நிற்பன் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள். இதனைச்

சிவசத்தியாய் விந்துவாய் மனோன் மனியாய்த்
திருந்திடும் கேசை உமையாய்ச்
செங்கமலை வெண்கமலை யாய் அருவம் உருவமாய்ச்
சிற்பரை ஒருத்தியாவாள் (5)

என விளக்குவர் குருமூர்த்திகள்.

அருமைந்தர் மூவர் :

அனைத்துயிர்களையும் உய்யக் கொள்ளும் அன்னைக்கு அவ்வுயிர்கள் அனைத்தும் மக்களே யாவர். எனினும் சிறப்பு வகையால் குருமூர்த்திகள் மூவரைக் குறித்தருளுகின்றார். அவர்கள் திருஞான சம்பந்தர், முருகன், மூத்தபிள்ளையார் ஆகியோர் ஆவர். இம் மூவருள் திருஞானசம்பந்தர் மண்ணுலகில் தோன்றியவராவர். இறைவன் உய்யக்கொள்ளுதற்குரிய இடச் சிறப்புக்கருதி, குருமூர்த்திகள் ஞானசம்பந்தரை முன்வைத்து மொழிகின்றார். இம் மண்ணுலகு இறைவன் அருளிப்பாட்டிற்குப் பெரிதும் உரித்தாதலை,

" இந்தப்பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு "

" அமரர்நாடு ஆளாதே ஆரூராண்ட அயிராவணமே என்
[அம்மானே "

எனவரும் திருமுறைகள் உணர்த்திக் காட்டும். இதனை நம் குருமூர்த்திகளும்,

செங்குமுத வாய்மலர்ந்து அழுத சம்பந்தரோடு
சேவலங் கொடி பிடித்தோன்
திகழ்யானை முகன்மைந்தர் உருண்டு விளையாடச்
செழும்பால் சொரிந்த தனமும் (8)

என்று குறித்தருளுவர்.

பாடுவார் பசி தீர்ப்பாய் :

'பாடுவார் பசி தீர்ப்பாய் பரவுவார் பிணி களைவாய்' என்னும் திருமுறை. இவ்வனுபவம் பெற்ற முப்பெரும் மக்களைக் குரு மூர்த்திகள் சிறப்பாகக் குறித்துப் போற்றுகின்றார். காழிப்பதியில் கவுணியக்கன்றிற்குப் பாலும், திருப்பைஞ்ஞீலியில் திருநாவுக் கரசர்க்கு அமுதும், திருக்குருகாவூரில் சுந்தரருக்குப் பொதிசோறும் இறைவன் தந்தருளிய பாங்கு திருத்தொண்டர் புராணத்தில் அறியப்பட்ட வரலாறுகளாகும். அவ்வரலாறுகளில் சம்பந்தருக்கு ஞானப்பால் வழங்கிய ஒன்றே இறைவன் அம்மையார் வழிச்செய்த அருட்செயலாகும். ஏனைய இரண்டும் இறைவன் தாமே ஆற்றிய தாகும். எனினும் அம்மையோடு அப்பனுக்கு வேறின்றி ஒழியாது நின்ற சிவபரம்பொருளின் செயலாதல் பற்றி இவ்வருஞ்செயல் களையும் அம்மையார் செய்ததாகவே கூறிய தனுகின்றார்.

சீகாழி நகரினில் சம்பந்தருக்கு நீ
திருமுலைப் பால் கொடுத்தாய்
திகழும் பைஞ்ஞீலியில் அன்னம் சமைத்தருள்
திருநாவினுக் கரசுண
நீ காவலன் சிவன் கையிற் கொடுத்தாய்
நிறைந்த குருகாவூரினில்
நேசமுடனே சமைத்தே இடும் கட்டமுதை
நின்மலன் கைக் கொடுத்தே
நோகாமலே பசியிலாரூர ரடியரோடு
நுகரவருள் செய்து நின்றாய். (9)

இலன் என்னும் எவ்வம் உரையாமை :

'இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன் உடையான் கண்ணே உள' (223)

என்னும் திருக்குறள். மக்கட்கே இவ்வரிய பண்பு வேண்டுமெனில் தெய்வமாய அன்னைக்கு இவ்வரிய பண்பு இருத்தல் சொல்லவும் வேண்டுமோ! அம்மையின் அருட்கரங்கள் வரையாது வழங்கும் திருக்கரங்களாகும். ஒருநாட்செலினும், இருநாட்செலினும் பலநாள் பயின்று பலரொடு செல்லினும் தலைநாள் போன்ற அன்பினளாகும் தகைமை அப்பெருமாட்டிக்கேயுரியதாகும். அம்மையின் கரங்கள் இவ்வாறுவழங்கும் குறிப்பிற்கேற்ப அப்பெருமாட்டியின் கரங்களில் இருக்கும் அகப்பையும் முன் நின்று உதவுகிறது என்பதைக் குருமூர்த்திகள்,

'இல்லையென்னாதே தரும் தருவி' (1)

எனக் குறித்தருளுகின்றார்.

நிறைவுரை :

இம்மை, மறுமை, அம்மை ஆகிய மும்மை நலங்களையும் வழங்கியருளுபவள் அருள்மிகு அன்னபூரணி. இவ்வன்னையிடத்துப் பத்திமை கொண்டொழுகும் நம் குருமூர்த்திகளின் அயரா அன்பு அளவிடற்கு அரியதேனும் பதிகம் என்ற வகையில் அவர்களின் சிந்தனை இவ்வளவில் அமைவதாயிற்று.

வைகாசி மாதச் சிறப்பு நாட்கள்

14—5—89 ஞாயிறு, விஷ்ணுபதி புண்ணியகாலம். திருவையாறு மாதப் பிறப்புத் தீர்த்தம். தருமை ஸ்ரீ மாரியம்மன் திருவிழா.

16—5—89 செவ்வாய், தருமை ஸ்ரீ ஞானாம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞான புரீசுவரசுவாமிக்கு மகோற்சவ பூர்வாங்கங்கள்.

17—5—89 புதன், தருமை ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு மகோற்சவத் துவஜாரோகணம். திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு [தொடக்கம்.

18—5—89 வியாழன், பிரதோஷம்.

19—5—89 வெள்ளி, வைசாகப் பெருவிழா. திருத்தேர்.

20—5—89 சனி, வைசாக உற்சவ தீர்த்தம். திருக்குறுக்கை ஸ்ரீ காம தகனமூர்த்திக்கு அபிஷேகம். சீகாழி ஸ்ரீ திருஞான சம்பந்தருக்கு ரக்ஷாபந்தனம். பௌர்ணமி விரத பூஜையில் சந்தனம் சாத்துதல். வைகாசி விசாகம்.

21—5—89 ஞாயிறு, தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு சகோபுர ரிஷப வாகனக் காட்சி.

22—5—89 திங்கள், ஆச்சாள்புரம் ஸ்ரீ தோத்திரபூரணாம்பிகைஉடனுகிய ஸ்ரீ திருஞானசம்பந்தருக்குத் திருக்கல்யாணம். பின்னிரவு விடியல் ஐக்கியம். ஜோதி தரிசனம்.

23—5—89 செவ்வாய், ஸ்ரீ திருஞானசம்பந்தர் குருபூஜை. ஐக்கியம். தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்குத் திருக்கல்யாண வைபவம். வெள்ளிரதத்தில் ஏகாசனக் காட்சி. திருப் பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மாகேசுவர பூஜை. ஸ்ரீ முருக நாயனர் ஸ்ரீ திருநீலநக்க நாயனர் ஸ்ரீ திருநீலகண்டயாழ்ப்பாணர் குருபூஜைகள்.

24—5—89 புதன், சங்கடஹரசதுர்த்தி.

25—5—89 வியாழன், தருமை திருத்தேர்.

26—5—89 வெள்ளி, தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவ தீர்த்தம். தருமை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ ஆதி குருஞான சம்பந்தர் குருபூஜை. மாகேசுவரபூஜை. மாலை 26 ஆவது குருமகாசந்நிதானம் திருமஞ்சனமாடி, குருபூஜை வழிபாடு, ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி துவஜாவரோகணம்.

27—5—89 சனி, தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் சிவபூஜைசெய்தல். ஆதீனமடாலயத்தில் மாகேசுவரபூஜை. இரவு 26 ஆவது குருமகாசந்நிதானம் பட்டினப்பிரவேசம.

28—5—89 ஞாயிறு, காளாஷ்டமி. அக்னிநக்ஷத்திர நிவர்த்தி 23-17.

1—6—89 வியாழன், பிரதோஷம். ஸ்ரீ கழற்சிங்க நாயனர் குருபூஜை.

2—6—89 வெள்ளி, மாதசிவராத்திரி. தருமை ஸ்ரீ சண்முகருக்கு அபிஷேகம். வேளூர் மண்டலாபிஷேகக் கிருத்திகை.

3—6—89 சனி, சர்வ அமாவாசை.

6—6—89 செவ்வாய், ஸ்ரீ நம்பியாண்டார்நம்பி குருபூஜை

7—6—89 புதன், சதுர்த்திவிரதம். ஸ்ரீ நமிநந்தியடிகள், ஸ்ரீசேக்கிழார் குருபூஜைகள்.

9—6—89 வெள்ளி, சஷ்டி விரதம். திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் மாகேசுவரபூஜை.

12—6—89 திங்கள், தருமை ஆதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக சுவாமிகள் குருபூஜை.

Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M.

சண்முகவிலாசமும்

[illegible]ருத்தேர் வீதி உலாக் காட்சியும்



குறிப்பு :- உற்சவகாலங்களில் இன்னிசைக் கருவிகளுடன் ஆதீனத் தேவாரப் பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் திருமுறைப் பாராயணமும், வேத சிவாகம பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களால் வேத பாராயணமும் நிகழ்த்தப்பெறும்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram